# தனியார் பொறுப்பில் உள்ள 59 பாடசாலைகள்


★ ★ ★

Registered as a Newspaper in Ceylon — விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசிய தினசரி — National Tamil Daily

மலர் 6 (23-11-66) இதழ் 283

பராபவ ஷஃபான் 9 கார்த்திகை 8 புதன்கிழமை


## எடுத்துநடத்தும் உத்தேசம் அரசாங்கத்துக்கில்லையாம்

கொழும்பு, செவ்.

தற்போது தனியார் பொறுப்பில் இருந்து வரும் 59 தனிப்பட்ட பாடசாலைகளையும் அரசாங்கம் பொறுப்பேற்றுக் கொள்ளும் உத்தேசம் இல்லை என்று கல்வி மந்திரி திரு. இரியகொல்லை தெரிவித்துள்ளார்.

தனிப்பட்ட பாடசாலைகளை இனிமேலும் இயங்க அனுமதிப்பது பொருத்தமில்லையென்று பேராசிரியர் ஜே. இ. ஜயசூரிய தெரிவித்திருந்ததற்கு பதில் அளித்துள்ள கல்வி மந்திரி மேற்கண்ட கருத்தை தெரிவித்துள்ளார்.

தற்போது தனிப்பட்டவையாக இருக்கும் 59 பாடசாலைகளை பொறுப்பேற்கப் போவதில்லை என்று அறிவித்துள்ள கல்விமந்திரி ஆனால் புதிதாக தனிப்பட்ட பாடசாலைகள் அமைக்கப்படுவது அனுமதிக்கப்பட மாட்டாது என்றும் தெரிவித்துள்ளார்.

முதலில் பாடசாலைகளை பெறுப்பேற்றுக் கொண்டவர்கள் ஏன் இவைகளையும் பொறுப்பேற்காமல் போனார்கள், என்று பேராசிரியர் ஜயசூரியாவிடம் வினவியுள்ள மந்திரி அரிசியின் விலையை ஒரு கோஷ்டி 25 சதமாகக் குறைத்தது, இன்னொரு கோஷ்டி இலவசக் கல்வியைப் புகுத்தியது. இதனால் ஏற்பட்ட நிலைமையை நிவர்த்திக்க முனைபவர் நிச்சயம் நிர்மூலமாகிவிடுவார்கள். அந்த வேலையை நான் செய்யப் போவதில்லையென்று கூறியுள்ளார்.

இலங்கையில்

# 75 ஆயிரம் பேர் மனநோயாளர்கள்

## 15 வீதத்தினர் தான் சிகிச்சை பெறுகிறார்கள்

### மனநோய் பற்றிய நிபுணத்துவ குழு தெரிவித்துள்ள விபரம்

கொழும்பு, செவ்வாய்

**இலங்கையில் எழுபத்தி ஐயாயிரம் பேர் மனநோயினால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் இவர்களில் 15 சத விகிதத்தினர்தான் சிகிச்சை பெற்றுவருகிறார்கள். இந்நோய் பொதுவாக 25 வயதுக்கும் 35 வயதுக்கும் உட்பட்டவர்கள் மத்தியிலேயே அதிகமாககாணப்படுகின்றது மனநோய் பற்றி ஆராய்வதற்காக நியமிககப்பட்ட நிபுணாகுழு மேற்கண்ட தகவலை அறிவித்துள்ளது.**

இக்குழுவின் அறிக்கை சுகாதார மந்திரி திரு. எம். டி. எச். ஜயவர்த்தனவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கையின் விபரங்கள் இன்று மந்திரி நடத்திய பத்திரிகையாளர் மகாநாட்டில் வெளியிட்டார். டாக்டர் டபிள்யு. சி. விக்கிரமசிங்கா தலைமையில் மனநோயாளர் பற்றியும் இந்நோயைக்கட்டுப்படுத்துவது பற்றியும்மேற்படி குழு விரிவாக ஆராய்ந்துள்ளது,

இலங்கையில் 25 வயதுக்கும், 35 வயதுக்குமுட்பட்ட இளம் வயதினர் மத்தியிலேயே மனநோய் அதிகமாகக்காணப்படுவதாகத் தெரிவித்துள்ளது இக்குழு இதற்கு இந்த வயதினருக்குப் பொதுவாக ஏற்படடுள்ள மனநெருக்கடிகளும், அமைதியின்மையும்தான் காரணமென்று சுட்டிக்காட்டியுள்ளது.

நாட்டில் பரவலாகக்காணப்படும் மனநோயைத் தடுப்பதற்கு எல்லா பெரிய ஆஸ்பத்திரிகளிலும் மனநோய் சிகிச்சைப் பிரிவுகள் நிறுவப்படவேண்டும் என்றும், தற்போது இந்நோய் அதிகரித்துவருகின்றதென்றும் சிபார்சு செய்யபபட்டுள்ளது.

தற்பொழுது யாழ்ப்பாண ஆஸ்பத்திரியிலும், கண்டி ஆஸ்பத்திரியிலும் மனநோய் தடுப்புப் பிரிவுகள் நிறுவப் பட்டுள்ளன. யாழ்ப்பாணத்தில் 500 பேரும், கண்டியில் 500 பேரும் சிகிச்சை பெற்றுவருகிறார்கள். காலி, களுத்துறை, இரத்தினபுரி ஆகிய பகுதிகளிலும் மனநோய் பிரிவுகளை ஏற்படுத்தும்படியும் குழு கருத்துத் தெரிவித்துள்ளது.

மன நோயாளர்களை நீதிமன்றங்களுக்கு முன் ஆஜர் செய்யப்படும் பழக்கம் நீக்கப்பட வேண்டும் என்றும், மனநோய் நிபுணர்களைக் கொண்ட குழு ஒன்றின் முன்னிலையிலேயே அவர்கள் ஆஜர் செய்யப்பட வேண்டும் என்று அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆஸ்பத்திரிகளின் மனநோயாளர்கள் சுதந்திரமாக நடமாட அனுமதிக்கப்பட வேண்டும் என்றும் குற்றவாளிகளான நோயாளர் விஷயத்தில் கட்டுப்பாடு இருக்கலாமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


S.R.S. C.W.E.

ஜவுளி மாளிகையில் - ஜவுளிகள்

இன்று தொடக்கம் ஜவுளி வர்த்தகர்கள்

C. W. E. ஜவுளிகளை மொத்தமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

மற்றும் லங்கா மில் ஜவுளிகளும், கைத்தறி ஜவுளிகளும்

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

எஸ். ஆர். செல்லத்துரை

( C. W. E. அங்கீகாரம் பெற்ற மொத்த - சில்லறை விற்பனையாளர் )

216, காங்கேசன்துறை வீதி — யாழ்ப்பாணம்.

Phone: 296 — Estd: 1929 — Grams: 'ROHINI'


## விருப்பமில்லாதவர் வெளியேறலாம்

### இடதுசாரிக்கூட்டுபற்றி திருமதிசிறிமாவிளக்கம்

கொழும்பு, செவ்.

காலஞ்சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவின் கொள்கைகளை நிறைவேற்றுவதில் லங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட்கட்சி ஆகியவைகளுடன் சேர்ந்து ஈடுபடுவது என்று ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சித் தலைவர் திருமதி சிறிமாபண்டாரநாயக்கா தீர்மானித்திருப்பதாகத் தெரிகிறது.

நாட்டின் நலனைக்கருதி இடதுசாரிக் கட்சிகளையும் சேர்த்து உழைப்பதென்று திருமதி சிறிமா தீர்மானித்துள்ளார்.

இடதுசாரிக் கட்சிகளுடன் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தொடர்ந்துசேர்ந்து உழைப்பதை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருப்பவர்கள் எவராவது விரும்பவில்லையானால் அவர்கள் கட்சியிலிருந்து வெளியேறிவிடலாம்.

(8-ம் பக்கம் பார்க்க)

## சுன்னாகம் பட்டினசபை எல்லை விஸ்தரிக்கப்படும்

### அடுத்தமாதம் நேரில் விசாரணை

யாழ்ப்பாணம், புதன்

சுன்னாகம் பட்டினசபை எல்லை விஸ்தரிப்பு பற்றியும் சிறுபான்மைத் தமிழர் ஒருவருக்குப் பிரதிநிதித்துவமளிக்கக் கூடிய முறையில் ஒரு வட்டாரத்தை உருவாக்குவது பற்றியும் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க உள்ளூராட்சி அமைச்சரால் நியமிக்கப்பட்ட விசாரணைக் கமிஷன் சுன்னாகம் பட்டினசபையில் டிசம்பர் மாதம் 9-ம் 10-ம் திகதிகளில் காலை 8-30 மணிதொடக்கம் நேரில் சாட்சியங்கள் பதிவு செய்வர். எழுத்து மூலம் வாக்குமூலம் அளிக்க விரும்புபவர்கள் அன்று சமர்ப்பிக்கலாம்.

கமிஷன் விசாரணைக்கு அளித்த அவகாசம் போதாதென சுன்னாகம் பட்டின சபைத் தலைவர் ஆட்சேபம் தெரிவித்திருந்தார். இதற்குப் பதிலாக மேற்கண்ட விபரத்தை கமிஷன் காரியதரிசி திரு. நல்லநாதன் பட்டினசபைத் தலைவருக்கு அறிவித்துள்ளார்.

## சுமுக முடிவு ஏற்படலாம்

### மந்திரியின் நம்பிக்கை

கொழும்பு, செவ்.

வர்த்தக ஊழியர் பிரச்னை சுமுகமாக முடிந்துவிடும் என்று தாம் நம்புவதாக தொழில் மந்திரி திரு. எம். எச். எம். முகம்மது இன்று 'ஈழநாடு' நிருபரிடம் கூறினார்

மந்திரியின் சமரச முயற்சிகள் பலனளிக்கும் பட்சத்தில் நாளை அல்லது நாளை மறுதினம் வர்த்தக ஊழியர்கள் வேலைக்குத் திரும்பலாமென்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இன்று மாலை முதலாளிமார் சம்மேளனமும் வர்த்தக ஊழியர் சம்மேளனமும் மந்திரியின் கடைசிநேர முயற்சியினால் ஏற்பட்டுள்ள நிலைமையைப் பரிசீலனை செய்வதில் ஈடுபட்டிருந்தன.

பத்திரிகை அச்சுக்குப் போகும்வரை எதுவித முடிவும் அறிவிக்கப்படவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

கோழிக்குஞ்சுகள்:
உயர்ந்த இனக் குஞ்சுகள், நிதானமானவிலைகள் இலாபம் என்றும் 100% இலாபம். பத்துக் கோழிகளால் பெறும் வருமானத்தை ஒரு கோழி உங்களுக்குக்கொடுக்கும். மேலும் மேலும் உங்களையும் உங்கள் அயலவரையும் ஊக்குவிக்கும். எம்மிடம் மருந்துகளும் பெற்றுக் கொள்ளலாம். அடுனு ஏஜென்சீஸ், அளவெட்டி. 1498

மோட்டார் சைக்கிள்
B. S. A. மோட்டார் சைக்கிள் EN சிறிஸ், ஸ்ரேக் மேஜர். விபரங்களுக்கு:- N. செல்லத்துரை, மார்கெட் ஒழுங்கை, சுன்னாகம். 1169

## தேவை

சேல்ஸ் மனேஜர்...
சிவசக்தி இன்டஸ்றீஸ் சோப் தொழிற்சாலைக்கு சேல்ஸ் மனேஜர் தேவை. பிணைப்பணம் ரூபா 500/- லேபல் சுற்றுவதற்கு பெண்களும் தேவை. நேரில் விண்ணப்பிக்கவும். சிவசக்தி இன்டஸ்றீஸ், சோப் தொழிற்சாலை, நவற்கிரி வீதி, அச்சுவேலி. 2002

காஷியர் கிளாக்
காசுப் பிணைப்பணத்துடன் காஷியர் கிளாக் தேவை. இருபாலரும் விண்ணப்பிக்கலாம். தராதரங்களையும் விரும்பும் சம்பளத்தையும் எழுதவும். விளம்பர இல. 2005. ஈழநாடு மே/பா என எழுதி மூலம் விண்ணப்பிக்கவும். 2005

## காணவில்லை

மூக்குக்கண்ணாடி:
ஒரு மூக்குக் கண்ணாடி பச்சைநிறக் கூட்டுடன் கைதவறிவிட்டது. கண்டெடுப்போர், தயவுசெய்து, "ஈழநாடு" காரியாலயத்தில் கொடுத்து தகுந்த சன்மானம் பெற்றுக்கொள்ளவும். 1170

அரூர், நவ.22
18 முறை சிறைசென்ற 42 வயதுடைய அப்துல்அஜீஸ் மற்றுமொரு திருட்டுசம்பந்தமாக மீண்டும் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

**யாதவா**
(மூளாய்)
தினசரி 6-30, 9-30
விடுமுறை நாட்களில் 2-30 மணி
ஜெமினி - சரோஜாதேவி
நடித்த
**கல்யாண பரிசு**

**மகாத்மா தியேட்டர்**
தெல்லிப்பழை, கரவெட்டி
தினசரி
பி. ப. 4 மணி இரவு 9-30
**ABSENT MINDED PROFESSOR**
குலுங்கக் குலுங்க சிரிக்கவைக்கும் படம்


**REGAL—JAFFNA**
NOW SHOWING
James Garner
Elke Sommer
in
**THE ART OF LOVE**

**ராஜா**
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-45
போயா தினங்களில் 4 காட்சிகள்
எஸ்.எஸ். ஆர் - விஜயகுமாரி
நடித்த
**முத்துமண்டபம்**

**நியூ காலிங்கன்**
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
பாரத்பூஷன் - நிம்மி
நடித்த
**அங்குலிமாலா**
(சிங்களம்)

**2வது வெற்றி வாரம்!**

கிங்ஸ்லி (கொழும்பு) · பிளாஸா (வெள்ளவத்தை) · நவா (கொம்பனித்தெரு)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்) · விஜயா (மட்டக்களப்பு) · ஸ்ரீகிருஷ்ணா (திருமலை)
மொடேர்ண் (பண்டாரவளை) · மொடேர்ண் (பதுளை) · விஜிதா (ஹட்டன்)



**சிவாஜி கணேசன், தேவிகா**
சந்திரபாபு, புஷ்பலதா, அசோகன், பாலாஜி,
நாகையா, ஏ. வி. எம். ராஜன்
ஜாவர் சீதாராமன், பி. எஸ். வீரப்பா
நடிக்கும்
**ஆண்டவன் கட்டளை**
இசை: விஸ்வநாதன் இராமமூர்த்தி
டைரக்ஷன்: சங்கர்

## ஜேர்மனியில் புதிய தேசியம்

பாரிஸ், நவ. 22
பவேரியா ராஜ்ய சபைக்கான தேர்தல்களில் தீவிர வலதுசாரிகளான தேசிய ஜனநாயகக் கட்சியின் வெற்றி ஜெர்மனியில் வன்முறைத்தேசியத்தின் மறுமலர்ச்சி ஒன்றை ஏற்படுத்திவிடலாமென அச்சம்தெரிவிக்கப் பட்டுள்ளது.

'இது அமைதியின்மையை தரும்முடிவாகும். ஜெர்மனியில்இதுகுறிக்கும் அரசியல் மாற்றத்தை யாரும்புறக்கணித்து விடமுடியாது' என்று பிரெஞ்சுஅரசாங்கரேடியோ குறிப்பிட்டுள்ளது.

—— (பி.டி.ஸி)

## சுகர்ணோவுக்கு அதிக ஆதரவு

ஜாகார்த்தா, நவ. 22
கடந்தபல தினங்களில் பலமுன்னணி இராணுவ அதிகாரிகள் இந்தோனேஷிய ஜனாதிபதி சுகர்ணோவுக்கு தமது ஆதரவைப் பகிரங்கமாக உறுதிப்படுத்தியுள்ளனர்.

ஜெனரல் சுஹார்ட்டோவின் இராணுவ அரசாங்கத்திடம் இவ்வதிகாரிகள் வைத்துள்ளவிசுவாசம்பற்றி அவர்கள் விசாரணை செய்யப்படும்வேளையிலே இந்த ஆதரவு வெளியிடப்பட்டுள்ளது.

இராணுவ உத்தியோகத்தர் எவரும்கைது செய்யப்பட்டதை இராணுவம் மறுத்துள்ளது.

—— (பி.டி.ஸி)

பிரிட்டிஷ்

## கடற்படை தளபதி இலங்கை விஜயம்

லண்டன், நவ. 22
பிரிட்டனின் தூரகிழக்கு கடற்படைத்தளபதி வைஸ் அட்மிரல்சேர். பிராங் டுவிஸ் தமதுபாரியாருடன் 24-ம் திகதிஇலங்கைக்கு விஜயம் செய்வார். அவர் இலங்கையில்இரு தினங்கள் வரை தங்கியிருப்பார்.

24-ம்திகதிஅவர் இலங்கை வந்து சேர்ந்ததும் இராணிமாளிகைக்கு விஜயம்செய்து மகாதேசாதிபதி திரு. வில்லியம் கோபல்லாவைச்சந்திப்பார். அன்றைய தினம் அவர் பிரதம மந்திரியின் வாசஸ்தலமான அலரிமாளிகைக்கு விஜயஞ்செய்து அங்கிருக்கும் விருந்தினர்கள் புஸ்தகத்தில் கைச்சாத்திடுவார்.

25-ம் திகதி அட்மிரல் டுவிஸ் இலங்கையின் கடற்படைத்தளபதி கமாண்டர் கதிர்காமரைச் சந்திப்பார். அன்றுமாலை கமாண்டர் அளிக்கும் விருந்துபசாரத்தில்அவர்கலந்து கொள்வார். அட்மிரல் டுவிஸும் அவரது பாரியாரும் 26-ம் திகதிவிமானமூலம் இலங்கையிலிருந்து புறப்பட்டு விடுவார்கள்.

## 41 மொழிகளில் கிறிஸ்மஸ் செய்தி

லண்டன், நவ. 22
எலிசபெத் மகாராணியாரின் கிறிஸ்மஸ் செய்தி கிறிஸ்மஸ்தினத்தன்று காலை 9-30மணிக்கு உலகசேவையில் ஒலிபரப்பப் படுமென பி.பி.ஸி' அறிவித்துள்ளது. ஆங்கிலத்திலும்40 மற்றைய மொழிகளிலும் இந்தச் செய்தி ஒலிபரப்பப்படும்.

## புத்திரகண்டானில் புதியபாடசாலை

முருங்கன், செவ்
புத்திரகண்டானில்படிக்கும் மாணவர்களுக்காகபுதிய பாடசாலையொன்று அமைக்கப்படுகிறது. ஒருகிடுகுக் கொட்டிலுக்குள்ளேயே இப்போ [illegible] பெற்றுவருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

## பஸ்சேவை சீர்கேடு

குரும்பசிட்டி, செவ்.
குரும்பசிட்டி — யாழ்ப்பாணம் பஸ் சேவை மிகவும் சீர்கேடான முறையில் இயங்கி வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஒரு பஸ் மட்டும் இரண்டு மணி நேரத்துக்கு ஒரு தடவையாக சுமார் எட்டுமுறை போக்குவரத்துச் செய்யும். இச் சேவை பஸ் பழுதடைவதால் நாள் முழுவதற்குமான பஸ்சேவை இல்லாமல்போய் விடுகின்றது. இதனால் ஏழாலை, குப்பிளான், குரும்பசிட்டி போன்ற இராமங்களைச் சேர்ந்த கல்லூரி மாணவர்கள், அரசாங்க உத்தியோகத்தர் பெரிதும் கஷ்டமடைகின்றனர். சுன்னாகம் சந்தை நாட்களில் பெருந்தொகை இராமவிவசாயிகள் பிரயாணம் செய்வதால் பலருக்கு பிரயாண வசதி ஏற்படாமல் கூடப் போவதாகத் தெரிகிறது. இந்த பஸ் சேவை சீர்குலைவு குறித்து காங்கேசன்துறை எம். பி. திரு. செல்வநாயகம் அண்மையில் இ. போ. ச. அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டுவந்திருந்தார்.

## பெரும் குறை

முருங்கன், செவ்.
சங்காவிலில் ஒரு வைத்தியசாலை இல்லாதிருப்பது பெரும் குறையாக இங்குள்ளமக்கள் கருதுவதாகத் தெரிகிறது. இதன் காரணமாக இங்குள்ள ஏழைமக்கள் சாதாரண ஜலதோஷம் காய்ச்சல் வந்தாலும் ஆறுமைல் தூரத்துக்கப்பால் உள்ள மன்னாருக்கு செல்ல வேண்டியிருப்பதாகத் தெரிகிறது. சுகாதாரமந்திரி திரு. எம். டி. எச் ஜெயவர்த்தனா சங்காவிலுக்கு சமீபத்தில் வந்திருந்தபோது இக் குறைகள்பற்றி அவரிடம் தெரிக்கப்பட்டது.

## வானொலி

### கொழும்பு
புதன் 23 - 11 - 66

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

844 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமியநற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 குரல்வகை, 7-45 இரை இசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கர்நாடக இசை.

844 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 படத்திலிருந்து.

இரவு 6-10 விவசாயச் செய்திகள், 6-45 இராமசஞ்சிகை, 7-15 பாட்டு — வி. செல்லத்துரை, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 புல்லாங்குழலும் கிளாரினெட்டும், 9-30 பாட்டு — சரஸ்வதி ராஜேஸ்வரன், 10-00 நேயர்விருப்பம்.

## விபத்தில் காயமடைந்தார்

உரும்பராய், திங்.
உரும்பராயைச் சேர்ந்த ஜெகதீஸ்வரன் செலுத்திச் சென்ற காரும் எதிரேவந்த டிராக்டரும் கோண்டாவில் மோதி விபத்துக்குள்ளானது. ஜெகதீஸ்வரன் காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கட்டைவேலி
### ப. நோ. கூ. சங்கங்களின் சமாசம்
கரவெட்டி

மேற்படி சமாசத்தின் கட்டிடம் திருத்துவதற்கான கேள்விகள் மேற்படி சமாசக் காரியதரிசியால் 1966-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 15-ந் திகதி பிற்பகல் 2-30 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

முழுவிபரங்களும் நெல்லியடியிலிருக்கும் சமாசக் காரியாலயத்தில் 2-12-66 காலை 10மணிக்கு நேரில்வந்து பெற்றுக்கொள்ளலாம்.

1399 — கா. கணபதிப்பிள்ளை, காரியதரிசி.

### அந்தியகால சகாய நிதிச் சங்கம் லிமிற்றெட்
(பதிவு இல. S - 132)

330, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

கடந்த 11 ஆண்டுகளில் இறந்த 953 அங்கத்தவர்கள் பேரால் மரணசகாயப் பணமாகக் கொடுக்கப்பட்ட தொகை ரூ. 601,390-82 ரூ. 125,000-00 பெறுமதியான ஆதனமொன்றைத் தன்னுடையதாக வைத்திருக்கிறது. அங்கத்தவர்கள் தொகை 1100. 55 வயதிற்குட்பட்ட தேகசுகமுள்ள ஆண், பெண் இருபாலாரும் சேரலாம். மாதச் சந்தா ரூபா 5/- சேர்ந்து ஆறுமாதத்தின் பின் ஒருவருடத்திற்குள் மரணமேற்படின் அன்றைய செலவுக்கு ரூபா 350/- வழங்கப்படும். ஐந்து வருடம் முடிந்த அங்கத்தவருக்கு ரூபா 400/- கொடுக்கப்படும். அந்தியட்டிச் செலவுக்கு ரூபா 150/- கொடுக்கப்படும். மிகுதி பிரமாணங்களுக்கமைய வழங்கப்படும்.

முதலியார் செ. முத்துத்தம்பி, தலைவர், டாக்டர் வ. த. பசுபதி, தனாதிகாரி.

இ. சோமலிங்கம், காரியதரிசி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா.வில் சீனு: இத்தாலி யோசனைக்கு அமெரிக்கா ஆதரவு

## பார்மோஸா தொடர்ந்திருப்பதற்கு அல்பேனியா எதிர்ப்பு

ஐ. நா. (நியுயோர்க்) நவ. 22

ஐக்கிய நாடுகள் மகாசபையில் கம்யூனிஸ்ட் சீனுவை அனுமதிப்பது சம்பந்தமாக இத்தாலி தெரிவித்திருந்த யோசனைக்கு அமெரிக்கா ஆதரவு தெரிவித்துள்ளது, அமெரிக்காவுடன் வேறு ஐந்து நாடுகளும் இந்த யோசனைக்கு இணக்கம் தெரிவித்துள்ளன. ஆனால் சோவியத் யூனியன் இதனை நிராகரித்துவிட்டது. இத்தாலி தெரிவித்திருந்த யோசனை சம்பந்தமான பிரேரணையொன்று இப்பொழுது ஆறு நாடுகளினால் ஐ. நா. மகாசபைக் கூட்டத்தில் தாக்கல்செய்யப்பட்டுள்ளது.

ஐ. நா.வில் சேர்ந்து கொள்ள கம்யூனிஸ்ட் சீனு விரும்புகிறதா? ஐ. நா.சாஸனத்தின்படி நடந்துகொள்ள சீனு சம்மதிக்குமா? ஆகிய வைகள்குறித்து முதலில் பரிசிலனை செய்வதற்கு உலகப் பிரமுகர்களைக் கொண்ட சபையொன்றை ஐ. நா. நிறுவவேண்டுமென்று இத்தாலி சில தினங்களுக்கு முன்னர் ஐ. நா. மகாசபைக்கூட்டத்தில் யோசனை வெளியிட்டிருந்தது.

நேற்று நடைபெற்ற மகாசபைக்கூட்டத்தில் சீனுவை அங்கீகரிப்பது சம்பந்தமான விவாதம் இடம்பெற்றது. கூட்டத்தில் உரைநிகழ்த்திய அமெரிக்கப் பிரதிநிதி திரு. லோல்ட்வேர்க், ஐ. நா.வில் சீனுவை அனுமதிப்பது சம்பந்தமான இத்தாலியின் யோசனையை அமெரிக்கா ஆதரிப்பதாகக் கூறினர். ஐக்கிய நாடுகள் சபையில் சீனுவை சேர்ப்பது சம்பந்தமாக சீனுவின் உண்மையான நோக்கத்தை முதலில் தெளிவுபடுத்திக்கொள்ள இது உதவலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

சோவியத் பிரதிநிதி இதனை எதிர்த்துப்பேசினர். ஐ. நா.வில் சீனுவைச் சேர்ப்பதை மேலும் தாமதிக்கவே இத்திட்டம் வகை செய்யும் என்று ரஷ்யப் பிரதிநிதி கூறினர்.

கம்யூனிஸ்ட் சீனுவை ஐ. நா.வில் உடனடியாகச் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று தெரிவித்த ரஷ்யப் பிரதிநிதி, போர்மோஸாவையும் சீனுவையும் வைத்திருக்கக்கூடாதென்றும் பீகிங்குக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

அல்பேனியப் பிரதிநிதி பேசுகையில், போர்மோஸாவை அகற்றி பீகிங்குக்கு இடமளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

அமெரிக்க பிரதிநிதி இதற்குப்பதிலளிக்கையில் எக்காரணம்கொண்டும் போர்மோஸாவை (தாய்வான்) அகற்ற முடியாதென்றும் சீனுவை அனுமதிப்பதில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளைப் பெறவேண்டும் என்றும் கூறினர்.

ஐ. நா.வில் பீகிங்கை சேர்க்கவேண்டுமென்ற பிரேரணையை நேற்று பர்மாவும், பிரஸவில் காங்கோவும் ஆதரித்தன.

ஐ. நா. மகா சபைக் கூட்டத்தில் இப்பொழுது இரண்டு பிரேரணைகள் தாக்கல் செய்யப் பட்டிருக்கின்றன. ஒன்று, ஐ. நா.வில் கம்யூனிஸ்ட் சீனுவை அனுமதிக்க வேண்டுமென்ற பிரேரணை. இதனை பத்து நாடுகள் தாக்கல் செய்திருந்தன.

இத்தாலி தெரிவித்த யோசனைக்கிணங்க ஐ. நா.வில் சீனுவை சேர்ப்பது சம்பந்தமாக ஆராய உலகச் சபையொன்றை ஐ. நா. நிறுவ வேண்டுமெனபது மற்றைய பிரேரணையாகும்.

## ஆசிய வங்கி நிர்வாகிகள் கூட்டம் நாளை ஆரம்பம்

டோக்கியோ, நவ. 22

ஆசிய வங்கியின் நிர்வாகிகளின் பூர்வாங்கக் கூட்டம் இம்மாதம் 24ந் தேதி முதல் 26ந் தேதிவரை இங்கு நடைபெறவிருக்கிறது.

இம்மகாநாட்டின் முன்னோடியாக 21ந் தேதி நடைபெற்ற 14 அங்கத்துவ நாடுகளைக்கொண்ட கமிட்டி கூட்டத்தின் பூர்வாங்க அமைப்புகளைக் கவனித்தது. தொடர்ந்து 22ந் தேதி நடைபெற்ற கூட்டத்தில் ஆசியவங்கிச் சாசனத்தில் கைச்சாத்திட்ட நாடுகளின் பிரதிநிதிகளும், கமிட்டி அங்கத்தவர்களும் ஒன்றுகக் கூடினர். ஆசிய வங்கி டிசம்பர் மாதம் 19ந் தேதி மணிலாவிலுள்ள தனது நிரந்தர செயலகத்தில் செயற்பட ஆரம்பிக்கும்.

கடன் வழங்கும் சட்ட திட்ட வழிமுறைகள் பற்றி வங்கியின் நிர்வாகிகள் பின்னர் சந்தித்துத் தீர்மானிப்பர். வங்கியின் வரையறுக்கப்பட்ட மூலதனத்தின் பெரும்பகுதி 18 பிராந்திய நாடுகளிலிருந்தும், 12 இதர நாடுகளிலிருந்தும் கிடைத்துள்ளன. வங்கியின் நிர்வாகிகளாகப் பத்துப்பேர் இருப்பர். இவர்களில் ஏழு பேரை பிராந்தியநாடுகளும் மூவரை இப்பிராந்தியத்தில் இல்லாத இதர நாடுகளும் தெரிவுசெய்யும்.

தெ. வியட்னுமில்

## வியட்காங்கியர் சண்டையில் அமெரிக்கருக்கு அதிக சேதம்

சைகோன், நவ. 22

தென்வியட்னுமின் மத்திய பகுதியில் கடந்த இரண்டு தினங்களாக நடைபெற்ற சண்டையில் அமெரிக்கத் தரப்பில் அதிகமான உயிர்ச்சேதம் ஏற்பட்டுள்ளதாக இங்கு அறிவிக்கப்பட்டது.

வியட்காங்கியருக்கும் அமெரிக்கத் துருப்புகளுக்குமிடையே ஏற்பட்ட இச்சண்டையில் மூன்று அமெரிக்கத் துருப்புகள் மட்டுமே உயிர் தப்பினர் என்று இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அமெரிக்கத் தரப்பில் அதிக உயிர்ச்சேதம் ஏற்பட்டபோதிலும் இப்பகுதியிலிருந்து வியட்காங்கியர் விரட்டப்பட்டுவிட்டனர் என்றும் நூறு வியட்காங்கியரின் சடலங்கள் சண்டை நடைபெற்ற பகுதியில் காணப்பட்டதென்றும் இந்த அதிகாரி கூறினர்.

## சங்கராசாரிய சுவாமிகள் காவலில் வைக்கப்பட்டார்

புதுடில்லி, நவ. 22

பசுவதையைத் தடைசெய்யச் சட்டம் கொண்டுவரப்பட வேண்டுமென்று கோரி யமுனை நதிக்கரையில் சாகும்வரை உண்ணுவிரதம் ஆரம்பித்த பூரி ஜகத்குரு சங்கராச்சாரிய சுவாமி இன்று காலை டில்லிப் பொலிஸாரினல் கைதுசெய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டார்.

ஒரு லட்சம் இந்துக்களின் ஆதரவைப் பெற்ற இவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை தமது உண்ணுவிரதத்தை ஆரம்பித்தார்.

பரிசுத்த நீரைத் தவிர வேறு எதையும் தொடுவதில்லை என்று இவர் அறிவித்திருந்தார். யோகநிலையில் அமர்ந்து கொண்டிருந்த சங்கராச்சாரிய சுவாமி முன்பாக ஏராளமான அடியார்கள் நேற்றுக் குழுமியிருந்தனர்.

பசுவதையைத் தடைசெய்ச் சட்டம் கொண்டுவர வேண்டுமென்று இந்திய அரசாங்கத்துக்கு இவர் கோரிக்கைவிடுத்தபொழுது இச்சட்டம் கொண்டுவருவது பதினறு ராஜ்யங்களின் சம்பந்தப்பட்ட பிரச்னை என்றும் தெரிவித்து இக்கோரிக்கையை அரசாங்கம் ஏற்க மறுத்து வருகிறது.

## ஜெர்மன் விஞ்ஞானி காலமானர்

பூட்பெரி (நியுஜேர்ஸி) நவ. 22

இரண்டாவது உலக மகாயுத்தத்தின்போது ஹிட்லரின் முதலாவது ரொக்கெட் விமானத்தைத் தயாரிக்க உதவிசெய்த ஜெர்மன் விஞ்ஞான நிபுணர் டாக்டர் பிரெடரிச் ஓ. ரிங்லெப் நேற்று முன்தினம் இங்கு காலமானர். 1945-ம் ஆண்டு தொடக்கம் இவர் அமெரிக்காவில் பணிபுரிந்து வந்துள்ளார். (பி. டி. ஐ.)

## யு.எஸ்., ரஷ்யாவுக்கு இந்தியா ஆட்சேபம்

புதுடில்லி, நவ. 22

அஸ்ஸாம் ராஜ்யத்தில் உள்ள இந்திய வடகிழக்கு எல்லைப் பகுதியை மக்கள் சீனக்குடியரசின் ஒரு பகுதியாக அதிகார பூர்வமான ரஷ்ய பூகோளப் படங்கள் காட்டுவதை சோவியத் யூனியனிடம் இந்தியா ஆட்சேபித்துள்ளதாக இந்தியவெளிநாட்டு மந்திரி திரு. எம். ஸி. சக்ளா பார்லிமெண்டில் தெரிவித்தார்.

அமெரிக்க தேசியபூகோள சங்கத்தின் பிரசுர கர்த்தாக்கள் உட்படப் பல பிரசுர கர்த்தாக்கள் காஷ்மீரை விவாதத்துக்குரிய பகுதியாகத் தமது பூகோளப் படங்களில் பிரசுரித்திருப்பதை ஆட்சேபித்து அமெரிக்க அரசாங்கத்துக்கும் புகார்கள் செய்யப்பட்டுள்ளதாக திரு. சக்ளா மேலும் தெரிவித்தார். (பி. டி. ஐ.)

## தெ.மே.ஆபிரிக்க விவகாரம்: 14 நாடுகள் கமிட்டி நியமனம்

நியுயோர்க், நவ. 22

தென்மேற்கு ஆபிரிக்கநிர்வாகம் சம்பந்தமாகக் கவனிக்கும் பொருட்டு பதினன்கு அங்கத்தவர்களைக் கொண்ட கமிட்டியொன்றை ஐ. நா. மகாசபைத் தலைவர் அமைத்துள்ளார்.

இக்கமிட்டியில் அமெரிக்காவும் ரஷ்யாவும் இடம்பெற்றுள்ளன. பிரிட்டனும் பிரான்சும் கமிட்டியில் அங்கத்துவம் வகிக்க மறுத்துவிட்டன.

தென்மேற்கு ஆபிரிக்காவில் தென்னுபிரிக்காவின் பராமரிப்பு அதிகாரத்தை முடிவுக் கொண்டு வரும் பொருட்டே இக்கமிட்டி நியமிக்கப்பட்டது. அடுத்தவருடம் ஏப்ரல் மாதத்துக்கு முன்னர் இக்கமிட்டி ஐ. நா. மகாசபைக்கு அறிக்கை சமர்ப்பிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## கிருஷ்ணமேனன்

பம்பாய், நவ. 22

வடபம்பாயில் கிருஷ்ணமேனனை டில்லி சட்டசபைக்கு போட்டியிட நிறுத்தும்படி அவரது ஆதரவாளர்கள் "வடபம்பாய் வாக்காளர் கவுன்ஸில்" என்ற பெயரில் ஒரு கமிட்டியை நிறுவி கையெழுத்து வேட்டை நடத்துகிறுர்கள். இதுவரை 8 லட்சம் பேர் கையெழுத்திட்டுள்ளனர். இவர்கள் கையெழுத்திட்ட மனு பிரதமர் இந்திரா காந்தியிடம் கொடுக்கப்பட்டது.

கிருஷ்ணமேனனை வடபம்பாயில் காங்கிரஸ் நிறுத்த தடையாயிருக்கும் மந்திரி பட்டீல்" என் பிணத்தின் மீது இருந்துதான் கிருஷ்ணமேனன் வடபம்பாய் தொகுதியை பெறமுடியும்" என்று கூறியுள்ளார். கிருஷ்ணமேனனுக்கு ஆதரவாக பிரபல இந்தி சினிமா நடிகர்கள் பக்கபலமாக இருக்கிறுர்கள்.

## ரயிலைத் தடுத்தனர்

சிதம்பரம், நவ. 22

அண்ணமலைப்பல்கலைக்கழக மாணவர்களால் சிதம்பரத்தில் 2 ரயில்கள் தடுத்து நிறுத்தப்பட்டன. காலை 9 மணிக்கு பல்கலைக் கழகம் வந்து சேரக்கூடியதாக வசதியான புகையிரதங்கள் விடப்படாத காரணத்தினுல் தான் அவர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் இறங்கினர். அண்ணமலைப் பதிவாளர் பேராசிரியர் ராஜாராம் மற்றும் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஆகியோர் மாணவர்கள் கோரிக்கைகளை நிறைவேற்றுவதாக உறுதியளித்த பின்னரே புகைவண்டிகளைப் போகவிட்டனர்.

## "இஸ்ரேல் மீது பொருளாதார தடை வேண்டும்"

### ஐ.நா.வில் ஜோர்டான் கோரிக்கை

ஐ. நா. (நியுயோர்க்), நவ. 27

இஸ்ரேலுக்கு எதிராகப் பொருளாதாரத் தடைகளை விதிக்க வேண்டுமென்று ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையை ஜோர்டான் கோரியுள்ளது.

ஜோர்டானை இஸ்ரேல் மீண்டும் தாக்கியது சம்பந்தமாக ஐ. நா.வில் ஜோர்டான் இரண்டாவது தடவையாகச் செய்த புகார் சம்பந்தமான நேற்றைய விவாதத்தின்போது இஸ்ரேல்மீது பொருளாதாரத் தடைகள் விதிக்கவேண்டுமென்று ஜோர்டான் பிரதிநிதி கோரிக்கை விடுத்தார். இக்கோரிக்கை சம்பந்தமாக இப்பொழுது விவாதிக்கப்பட்டுவருகிறது.

## தடை உத்தரவு

கடலூர், நவ. 22

திராவிடக் கழக ஆர்ப்பாட்டத்தின் காரணமாக தென் ஆற்காடு மாவட்டம் முழுவதும் தடைஉத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதன்படி 15 நாட்களுக்கு ஆர்ப்பாட்டங்களோ ஊர்வலங்களோ நடத்தக் கூடாது.

ஹைதராபாத், நவ. 22

ஆந்திராவில் இரும்பு தொழிற்சாலை அமைக்காததைக் கண்டித்து ஆந்திரா எதிர்கட்சியைச் சேர்ந்த 67 உறுப்பினர்களது ராஜினமாவை சபாநாயகர் ஏற்றுர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாசகு

தெய்வத்தை உண்மையாக நினைத்தால் நம்மால் பாவம் செய்ய முடியாது. அவரை மறக்கும்போது தான் பாவம் செய்கிறோம். அவரை மறவாமலிருக்கவே அவருடைய நாம மந்திரத்தை நற்றுணையாகக் கொள்கிறோம்.

—சுவாமி ராமதாஸ்


# ஈழநாடு

EELANADU National Tamil Daily, ...

Telegrams: EELANADU Jaffna Telephone ...

யாழ்ப்பாணம் பரா... கார்த்திகை 8 23-11-66


## பத்திரிகையாளர் தலைவர்

சர்வதேச பத்திரிகையாளர் ஸ்தாபனத்தின் புதிய தலைவராக இலங்கையைச் சேர்ந்த திரு. வி. ஈ. எல். விக்கிரமசிங்கா தெரிவு செய்யப்பட்டிருக்கிறார். இது இலங்கை மக்களுக்கும் குறிப்பாக இலங்கைப் பத்திரிகையாளர்களுக்கும் பெருமையும் மகிழ்ச்சியுமளிப்பதாகும்.

ஜனநாயகத்துக்கு ஆணிவேராகக் கருதப்படும் பத்திரிகைச் சுதந்திரத்துக்கு இலங்கையில் ஆபத்து ஏற்பட்டபொழுது அதை எதிர்த்துப் போராடிய பெருமை திரு. விக்கிரமசிங்காவையே பெரிதும் சேரும். அவர் பத்திரிகையாளர் ஸ்தாபனத்தின் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டது பொருத்தமே. பத்திரிகை இன்று மக்களுக்கு அறிவு வளர்ச்சிக்கு ஒரு சாதனமாக விளங்குகின்றது. இதனால் அது மக்களின் தேவைகளில் ஒன்றாகி விட்டது. இலங்கையில் இன்று பத்திரிகைகள் புதிதுபுதிதாகத் தோன்றுகின்றன. இது இந்த நாட்டு மக்களின் அறிவு வளர்ச்சிக்கு ஓர் எடுத்துக்காட்டு. பத்திரிகைகள் புதிதாகத் தோன்றினும், பத்திரிகைகள் வளர்ச்சி பெறினும் இங்கு பத்திரிகைகளின் வளர்ச்சிக்கு போதிய ஆதரவும் உதவியும் மட்டுமல்ல, சாதன வசதிகளும் வளர்ச்சி பெறவில்லை. வியாபார நோக்கத்தையே பெரும்பாலும் கொண்டிருப்பதால் இங்கு பத்திரிகைத்துறையில் ஏகபோகத்தன்மையும் அதிகரித்துவருகிறது. இதனால் சிறிய பத்திரிகைகள் பெரிய பத்திரிகைகளுடன் போட்டி போடுவது கடினமாக உள்ளது. இந்தியாவிலும் மற்றும் சில நாடுகளிலும் சிறிய பத்திரிகைகளுக்கு அரசாங்கத்தால் ஆதரவும் உதவியும் அளிக்கப்படுகிறது. இங்கும் அந்த நிலை ஏற்படவேண்டும். பத்திரிகைகள் அச்சடிக்கும் பத்திரிகைக் காகிதங்கள் சிறிய பத்திரிகைகளுக்கு குறைந்த விலையில் போதிய அளவு கிடைக்க வசதி செய்யப்படுவதுடன் பத்திரிகைக் காகிதத்துக்கு விதிக்கப்படும் தீர்வையிலும் விலக்களிக்கப்பட வேண்டும். சிறிய பத்திரிகைகளுக்குச் செய்தித் தகவல் தொடர்புகளிலும் சலுகை அளிக்கப்படவேண்டும்.

சிறிய பத்திரிகைகள் மட்டுமல்ல மாகாணப் பத்திரிகைகளுக்கு அரசாங்கம் ஆதரவு அளிக்க வேண்டும். 'டெலிபிரிண்டர்' சேவை, தந்தி, டெலிபோன் சேவையிலும் மாகாணப் பத்திரிகைகளுக்கு சலுகைகள் அளிக்கப்பட வேண்டியது அவசியம்.

தலைநகரிலுள்ள வசதிகள் மாகாணங்களில் மிக மிகக் குறைவு. இந் நிலையில் தலைநகரிலுள்ள பெரியபத்திரிகைகளோடு மாகாணப் பத்திரிகைகள் போட்டி போடுவது சுலபமல்ல. பத்திரிகைத்துறையில் அனுபவமும், இலங்கையின் பத்திரிகைகளுக்குள்ள வசதிக் குறைகளை நன்கு உணர்ந்தவருமான திரு. விக்கிரமசிங்கா, இலங்கையில் பத்திரிகைச் சுதந்திரம் நிலைபெறவும் அதன்மூலம் ஜனநாயகம் பாதுகாக்கப்படவும் சர்வதேசப்பத்திரிகையாளர் ஸ்தாபனத்தின் மூலம் இலங்கைப் பத்திரிகைகளின் வளர்ச்சிக்கு உதவிபுரிவாரென்று நம்புகிறோம்.

## போதும் இந்த விளையாட்டு

முதல் தடவையாக 'டெஸ்ட்' கிரிக்கெட் போட்டியில் கலந்து கொண்ட இலங்கை, பாகிஸ்தான் சென்று முதல் போட்டியில் பத்து விக்கட்டுகளாலும் இரண்டாவது போட்டியில் இன்னிங்ஸாலும் தோல்வியடைந்திருக்கிறது. விளையாட்டில் வெற்றியைக் கண்டு துள்ளுவதோ, தோல்வியை கண்டுமனம் சலிப்பதோ சரியல்ல. ஆயினும் ஒரு நாடு இன்னொரு நாட்டுக்குச் சென்று போட்டி விளையாட்டுக்களில் கலந்து கொள்வதில் தேசிய கௌரவமும் சம்பந்தப்பட்டுள்ளது. பாகிஸ்தான் சென்று, இலங்கை கிரிக்கெட் கோஷ்டி அடைந்த படுதோல்வி வெறும் விளையாட்டுப் போட்டியின் முடிவு அல்ல. இலங்கையின் அந்தஸ்துக்கே ஏற்பட்ட இழுக்கு; அவமானமும்கூட.

விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்வதற்காகக் கடல் கடந்து செல்லும் நமது விளையாட்டு வீரர்கள் நமக்குப் பெருமை தேடித் தராவிட்டாலும் அவமானமாவது தேடித் தராமலிருக்க வேண்டும். விளையாட்டுகளில் இதர நாட்டுக் கோஷ்டிகளின் தரத்தை அறிந்து அவர்களுக்கு ஈடு கொடுக்கக் கூடிய விளையாட்டு வீரர்களைக் கொண்ட குழுவை தனிப்பட்ட விருப்பு, வெறுப்புகளுக்கு இடம் கொடாமல் தெரிவு செய்ய வேண்டும். 'கிரிக்கெட்' நமது தேசிய விளையாட்டுக்களில் ஒன்று அல்ல. கிரிக்கெட்டில் இங்கு சரியான பயிற்சிக்கான வசதிகளும் இல்லை. எனவே 'டெஸ்ட் கிரிக்கெட்' போட்டிகளில் கலந்து கொண்டு இலங்கைக்குப் பெருமும் புகழும் ஈட்டிக் கொடுக்கும் நிலையில் இலங்கை இன்று இல்லை. கிரிக்கெட் விளையாட்டில் மட்டுமல்ல, இதர விளையாட்டுக்களிலும் வெளிநாடுகளுடன் போட்டி போடக் கூடிய நிலையை இலங்கை அடையும் வரை வெளிநாடுகளுடன் விளையாட்டில் போட்டி போடுவதை நிறுத்தி வைப்பது நல்லது. 'டெஸ்ட்' கிரிக்கெட்டுகளில் கலந்து கொள்வதை பாகிஸ்தானில் பெற்ற அனுபவத்துடன் நிறுத்திக் கொண்டு நம் வாலிப வீரர்களுக்கு விளையாட்டுக்களிலும் போதியபயிற்சியும் ஆதரவும் அளிப்பதே நன்மையாகும்.

# தமிழ் சமூகம் முன்னேற தீண்டாமை ஒழிய வேண்டும்

மனிதனுக்கு மனிதன் தான் விரோதி. இந்த உண்மையை எமது தமிழ்சமூகத்திலுள்ள இந்து மக்களிடையே நிலவும் தீண்டாமை எனும் தீயபழக்கம் பட்டவர்த்தனமாகப் பிரதிபலிக்கிறது.

நூற்றுண்டு காலமாக எம்மிடையே ஒரு சாராரை, அவர்கள் செய்து வந்த தொழில்முறையினால், நாம் கீழ்சாதியினராக மதித்து நடத்துவந்திருக்கிறோம். அவர்களை எமது இலைங்கள், ஆலயங்கள், பள்ளிக்கூடங்கள், தேநீர்க்கடைகள் மற்றும் இடங்களிலும் பொது ஸ்தாபனங்களிலும் நாம் அனுமதிக்காது வந்திருக்கிறோம்.

சாதி அடிப்படையில் பாகுபாடு காட்டி இவ்விதம் எமது சமூகத்திலேயே ஒரு பகுதியினரை நாம் தாழ்ந்த நிலையில் நிரந்தரமாக வைத்திருக்கும் நோக்கத்துடன் திட்டமிட்டோ திட்டமிடாமலோ செயலாற்றிவந்துள்ளோம்.

எல்லா மனிதர்களும் இறைவனின் குழந்தைகள். கடவுள் முன் யாவரும் சமம். சட்டத்தின் முன்னும் எல்லா மக்களும் ஒன்றே. எமது ஆன்றோரின் பொன்மொழிகளில் சாதி இரண்டொழிய வேறில்லை என்று சாற்றப்பட்டுள்ளது. 'பிறப்பொக்கும் எவ்வுயிர்க்கும்' என்றான் தெய்வப் புலவன் வள்ளுவன். 'சாதிகள் இல்லையடி பாப்பா' என்று பாடினான் புரட்சிக்கவி பாரதி. எமது தேவார திருப்பாக்களிலும் சாதி பேதம் தொனித்ததில்லை.

—மாலன்—

### பின்னர் புகுந்த பிணியே இது

தமிழனின் பொற்காலத்தில் கூடச் சாதிபேதம் பாராட்டப்படவில்லை. வெவ்வேறு தொழில்களில் மக்கள் ஈடுபட்டிருந்தது உண்மையே. ஆனால், எந்தத் தொழிலையும் கீழ்த்தரமானதாகவோ அல்லது அதைச் செய்பவர்களைக் கீழ்த்தரமானவர்களாகவோ யாரும் கருதவில்லை. அதற்குமாறாக, சிறிய தொழிலாயினும் அத்தொழிலிற் கடமையுணர்ச்சியுடன் செயலாற்றிய எவரும் உயரிய மனிதராகப் போற்றப்பட்டார்.

சாதிபேதமற்ற தமிழ்ச் சமுதாயத்தில் அந்நியர் வருகையாலும், பொருளாதார, சமூக மாற்றங்களாலும் சாதியில் உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற வாகுபாடு மெல்லமெல்லப் புகுந்தது. அதுவே ஈற்றில் தீண்டாமை என்ற கொடிய சமூகப் புற்றுநோயாக மாறிற்று. முக்கியமாக இத் தீண்டாமை யாழ்ப்பாணத் தமிழ் மக்களிடையே பெரிதளவுவேரூன்றிவிட்டதென்றால் மிகையாகாது.

பல புரட்சிகரமான மாற்றங்களுக்குட்பட்டு வரும் இன்றைய உலகில், தீண்டாமை இனிமேலும் தமிழ் சமூகத்தில் நிலவ இடமுண்டா என்ற கேள்வி பிறந்துள்ளது. இதுவரையே இந் நாட்டின் பெரும்பான்மை மக்களிடமிருந்து சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள் என்ற ரீதியில் நாம் எமது அடிப்படை உரிமைகளைப் பெறப் பல போராட்டங்களிலும் ஈடுபட்டுவருகிறோம். இந்தக் கட்டத்திலும் கூட, எமது சொந்தச் சமூகத்தில் இருபான்மையினராக நடத்தப்பட்டுவரும் ... தமது ... களைத் தாம் ... எம்மிடம் கேட்கும்போது, நாம் இல்லாத பொல்லாத காரணங்களை எல்லாம்காட்டி அந்த உரிமைகளை மறுக்க முயல்கிறோம். இது எமது நேர்மைக்கும், மனத்தூய்மைக்கும் ஒரு சவாலாகும். அத்துடன் எமது உயரிய அறிவு, கல்வி ஞானம், உள வளர்ச்சி, அனுபவ முதமை யாவற்றையும் சிறுமைப்படுத்துவதுமாகும்.

### பெரியார் யாரும் வரவேற்றார?

உலகிலே தெய்வீக ஒளி பரப்பிய கிறிஸ்துநாதர், புத்தர்பிரான், நபிநாயகம், மகாத்மாகாந்தி, சுவாமி ராமகிருஷ்ணர், விவேகானந்தா போன்ற மகான்களில் ஒருவராவது மனிதர்களிடையே தீண்டாமை இருப்பதை எள்ளளவாவது வரவேற்றுள்ளாரா? எதிர்மாறாக, தீண்டாமைபோன்ற கொடிய சமூக முறைகள் ஒழிந்து, மனிதகுலம் அனைத்தும் ஒன்றே என்ற அடிப்படையில் மனிதர்கள் வாழவேண்டுமென்றே அப் பெரியார்கள் போதித்தனர்; வாழ்ந்தும் காட்டினர்.

(5-ம் பக்கம் பார்க்க)

# பசு வதை

கொழும்பில் ஒரு பிரபல பண்ணைக்காரர் இருந்தார். அவருடைய தொழுவத்தில் நூற்றுக்கணக்கான சிறந்த இனப் பசுக்களும் காளைகளும் வளர்ந்தன. இயற்கையாகவே கருணையுள்ளம் படைத்த மனிதராகையால் அவர் தமது மந்தைகளை அன்போடு போஷித்து வந்தார். முக்கியமாக 'லட்சுமி' மீது அவருக்கு அபார பிரேமை. அது அவருடைய செல்லக் குழந்தை. அழகான பசு நிறையப் பசும்பால் தரும். காலகதியில் லட்சுமிக்கு மூப்பு வந்து விட்டது. கன்று ஈன்று பால் தரும் சக்தியை அது இழந்து விட்டது. அதை என்ன செய்யலாம் என்ற பிரச்னை பண்ணைக்காரருக்கு எழுந்தது.

கசாப்புக்கடைக்குக்கொடுக்கலாமா? 'ஐயையோ, இத்தனை வருடமாக கிளி போல் வளர்த்து பூனை கையில் கொடுப்பதா? காலை மாலை அதன் தீம்பாலை அருந்திவிட்டு, பால் நின்றதும் அதை கொலைக்களத்துக்கு அனுப்புவதா? முடியவேமுடியாது, அப்படியானால் அது தானாகவே இறக்கும் வரை தீனி போட்டுக் கொண்டிருக்க வேண்டியது தான், 'அதெப்படி முடியும்? எத்தனை நாளைக்கு அதைக்கட்டி வைத்து தீனி போடுவது? அதற்குப் போடும் தீனியை மற்றப் பலன்தரும் மாடுகளுக்குப் போடலாமே? அதுவுமன்றி அது இருப்பதால் இனத்தின் தரமும் குறைந்து விடுமே?'. சரி, வேறுவழியில்லாவிட்டால் அதைக் கட்டாக்காலியாக அவிழ்த்து விட்டுவிடலாம்.' அதை செய்வதற்கும் மனம் வரவில்லையே! இவ்வளவு குஷியாக வளர்ந்தமாடு எங்கெங்கே அலைந்து, வேளாவேளைக்கு நல்ல சாப்பாடு கிடைக்காமல், வெய்யிலிலும் மழையிலும் வாடி, படுத்துறங்குவதற்கும்இடமில்லாமல் தவிக்கிறதோ! அப்படிச் செய்வது அணு அணுவாய் அதைக் கொலை செய்வதற்குச் சமானமல்லவா?

பின் என்னத்தைத்தான் செய்யலாம்! இந்த இடியப்பச்சிக்கல் அந்தப் பண்ணைக்காரருக்கு மட்டுமன்றி பசுப்பிராணியில் அன்புகொண்ட எல்லா மானிடருக்குமே ஏற்பட்டுள்ளது.

ஆதிகாலந்தொட்டு ஏரும் பசுவும் இணைபிரியாமல் இருந்துவந்தன. ஏர், எருது ஏரி ஆகிய மூன்றும் விவசாயத்துக்கு இன்றியமையாதவை. மனிதனுடைய பொருளாதாரத்தோடு

(5-ம் பக்கம் பார்க்க)

### நாட்டிலும் நகரிலும்

### தீட்டு, தீண்டுதல், தீண்டாமை

# மன அழுக்கை போக்குவது எப்படி?

—க. வை. ஆ. சர்மா—

(நேற்றைய தொடர்ச்சி)

மோகமாவது அடங்காத ஆசை. மண், பெண், பொன் என்னும் மூவகைப் போகப் பொருள்களையும் எந்த அளவுக்கு அனுபவித்தபோதும் நிறைவுபடாமல், மேலும் அடைய விரும்பும் பேராசை. இதுவும் ஒருவனிடத்து நிலைபெறுமானால் அவனது மனத் தூய்மையைக் கெடுத்து அவனைத் தீட்டுடையவனாக்கி விடும்.

மதமாவது, "நான்" எனது என்ற இறுமாப்பு. இதனையே அகங்கார மமகாரமென்பர். தானே தலைவன், தானே முதன்மையுடையவன் — பெரியவன், ஏனையோரெல்லாம் இழிந்தவர்—தாழ்ந்தவர் என்ற நினைப்பே "நான்" எனப்படுவது. தன் உடைமைகளே சிறப்புடையன. பிறர் உடைமைகள் யாவும் இழிவுடையன என்ற நிலையே 'எனது' எனப்படும். இவ்வாறு இறுமாப்புக்கொண்டவர் ஒருபோதும் மேன்மை அடைந்ததில்லை. ஆனால் இறுமாப்பிலும் நல்ல இறுமாப்பு என்று இருக்கிறது. அது எதுவென்றால்?

"இறுமாந் திருப்பன் கொலோ ஈசன்பல்கணத் தெண்ணப்பட்டுச், சிறுநா னேந்திதன் சேவடிக்கீழ் நின்றங்(கு) இறுமாந்திருப்பன் கொலோ".

எனத் திருநாவுக்கரசு நாயனார் திருவங்கமாலையில் தெளிவுபடக் காட்டியுள்ளார். அதாவது, இறைவனது சிவகணத்தவருள் தமியேனும் ஒருவனாக மதிக்கப்பட்டு ஒருபோதும் அழியாத பேரானந்தப் பெருவெள்ளத்தில் திளைத்து நிச்சயமாக இறுமாந்து இருப்பேன் என உறுதிகூறியவாறாம். இவ்வாறல்லாமல் போலி இறுமாப்புக்கொள்ளுதல் மனத்தை மாசுபடுத்தித் தீட்டு உடைமையை ஆக்கிவிடும்.

மாற்சரியமாவது — பிறர் அனுபவிக்கும் போகபோக்கியங்களைக்கண்டு இவரும் இப்படி அனுபவிக்கவோ என்று மனம் பொறுத் தன்மை. அதுவே பொறாமை. இவ்வுலகத்தால் ஒருவன் போகபோகியங்களை அனுபவிக்கும் பேறு பெற்றவனாயினும் பிறர் இன்புறுவதைக் கண்டுதான் மகிழவேண்டிய

(5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் சமூகம் முன்னேற....

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

## தீயவர் எங்கும் உண்டு

தீண்டாதோரெனப்படும் சிறுபான்மை மக்களாயினும் சரி, உயர்ஜாதியினர் என அழைக்கப்படுவோராகினும் சரி, ஆலயத்தில் இறைவனை முறையாக வழிபடின், அவர்கள் ஆலயத்தில் உள்ள இறைவன் முன்னிலையில் சமமானவரே. தீண்டாதோருக்குக் கிடைக்கப் பெறும் கல்வி, சமூக, பொருளாதார வசதிகள் கிடைக்கப்பெற்ற எம்மவரிடையே அனேகர் பல தீய பழக்கங்களுக்கு அடிமையாகி இருப்பதை நாம் கண்கூடாகக் காண்கிறோம். ஆனால், எமக்குமட்டும் எவ்வித தடையுமின்றி ஆலயக்கதவுகள் வழிவிடுகின்றன. அப்படியாயின், எமது இறைவன் பாரபட்சமானவனா? இல்லை. இறைவன் நாமத்தைச் சொல்லிக்கொண்டே மனிதன் தான் பாரபட்சம் காட்டுகிறான். இறைவனின் உரிமைகளையும், அதிகாரங்களையும் தானே மேற்கொள்ள முனைகிறான் இது ஆணவத்தையே குறிக்கிறது. எமது வைதீகப்பெருமக்கள் இந்த ஆணவத்தைக் களைந்தெறிந்து விட்டு, அன்பின் அடிப்படையில் எல்லா மக்களையும் இறைவனின் குழந்தைகள் என்று மனதிற்கொண்டு, தமது இதயங்களின் வாயில்களைத் திறந்துவிட முன்வரவேண்டும். அப்போதுதான் அவர்கள் சைவ சமயத்தையும், தமிழ்ச்சமூகத்தையும் காத்தவர்களாவர்.

## ஒரு வேண்டுகோள்

சிறுபான்மை மக்களுக்கும் ஒருவேண்டுகோள், இதுவரைகாலம் ஒருசில சமூகக் குறைபாடுகளுக்கு இலக்காகி வந்த சிறுபான்மைச் சமூகத்தினர், இன்று தமக்கு விடிவுகாலம் நெருங்கிவிட்டது என்பதை உணரவேண்டும். இந்த உணர்ச்சி அவர்களுக்கு வீண்வீம்பையும், தலைக்கிறுக்கையும் உண்டாக்கக் கூடாது. அதற்குப்பதிலாக சமூகத்தில் தமது புதிய பங்கினை ஆற்ற அதிக பொறுப்புணர்ச்சியும், கடமையுணர்ச்சியும் அவர்களுக்கு அவசியமாகின்றது.

உரிமைகள் வரும்போது, அவற்றுடன் சேர்ந்தே சில கடமைகளும் வருவதும் இயல்பு.

இந்தக் கடமைகளைப் பணிவுடனும், பண்புடனும் ஆற்ற அவர்கள் முன்வரவேண்டும். தமக்கு அளிக்கப்பட்ட உரிமைகளுக்குத் தாம் சகலவிதத்திலும் தகுதியானவர்கள் என்பதை உணர்த்தும் வகையில் அவர்கள் நடக்கவேண்டும்.

உள்ளத்துடன் உள்ளம் ஒன்றி இணைவதே சமரசம் என்பதை சிறுபான்மை மக்கள் உணரவேண்டும், தமது உள்ளங்களை இறைவழிபாடு மூலமும், பண்புள்ள பழக்க வழக்கங்கள்மூலமும் விருத்திசெய்யவேண்டும். கல்விஞானம், கேள்விஞானம் இவற்றை வளர்க்கவேண்டும். இவர்களுடைய இந்த உள்ளளர்ச்சியில் தீண்டாமை ஒழிப்பு இயக்கங்களும், சங்கங்களும் பெரிதும் உதவ இடமுண்டு. அவர்களின் உரிமைகளுக்காகப் போராட முன்வருபவர்கள், அம்மக்கள் அந்த உரிமைகளின் பயனைப் பண்பட்ட சமூக வாழ்வைப் பெறக்கூடியவிதத்தில், அவர்களை நல்வழிப்படுத்தும் சமூகத் தொண்டுகளில் ஈடுபட்டால், அதுமிகவும் நன்மை பயப்பதாகும். இதுவரையாரும் இதுபற்றிச் சிந்திக்காது இலிந்ததைப்போ. மகாத்மா காந்தி முதலில் தனது தொண்டர்களைப் பண்படுத்திவிட்டு, அதன்பின்னரே உரிமைப்போராட்டம் நடத்தினார். நிரந்தர வெற்றிக்கு இதுவே வழியாகும். இந்த உண்மையைச் சிறுபான்மை மக்கள் என்றும் தமது உள்ளங்களில் நிலைநிறுத்தி வைத்துக்கொள்வது அவசியம்.

## சட்டம் அவசியமே

தீண்டாமையை ஒழிக்க அரசாங்கமும் சட்டம் இயற்ற ஆலோசித்திருக்கிறது. இது முற்றிலும் வரவேற்க வேண்டியதே. சட்டத்தினால் மட்டும் தீண்டாமையை ஒழித்துவிட முடியாது. இது உண்மையே. ஆனால் எந்த ஒரு நீதியையும் மனிதர்க்கிடையே நிலைநாட்ட, முதன்முதலில் சட்டம்தான் அவசியம். தீண்டாமை ஒழிப்பின் முதற்படிதான் சட்டம். அதுவே இறுதிப்படியுமாகும், உயர் சாதியினர், வைதீகப்பெருமக்கள், மற்றும் தீண்டாமையை ஆதரிப்போர் ஆகியோர் மனம் மாறுவதும், தமது இதயக்கதவுகளைத் திறந்துவிடுவதும் எல்லாம் இடைநிலைப்படிகளாகும். முதற்படியிலிருந்து இடைநிலைப்படி முன்னேறினால், சட்டப்பிரயோகம் என்னும் இறுதிப்படிக்கு இடமிருக்காது. வேறு அநாவசியமான விளைவுகளுக்கும் இடமிருக்காது. ஆனால், இடைநிலைப்படி இருந்தவாறே இருக்க இடம் படித்தால், சட்டத்தின் இறுதிப்படி செயற்படுத்தப்படும். ஆகவேதான், சட்டம் இன்றியமையாததாகிறது. தமது மனதை மாற்றிக்கொண்டு, சட்டத்துடன் இணைந்து சென்றால், எமது சமூகத்தில் உயர்நிலையிலுள்ளவர்கள் பிறசமூகத்தினராலும், உலகத்தவராலும் கண்ணியமானவர்களாகவும், மனிதாபிமானமுள்ளவர்களாகவும் மதிக்கப்படுவர்.

தீண்டாமை ஒழிக்கப்பட வேண்டுமென்பதில் அநேகமாக தமிழ்ச் சமூகத்திடையே ஒற்றுமை ஏற்பட்டுள்ளது. தீண்டாமையை ஒழிக்க முன்வருபவர்கள், காலந்தாழ்த்தாது ஆக்கபூர்வமான நடவடிக்கைகளில் இறங்கவேண்டும். கிராமங்கள்தோறும் பிரச்சாரம் செய்யவேண்டும். கட்டுப்பாட்டுடனும் ஒழுங்குடனும் ஆனால் உள உறுதியுடன் செயலாற்றவேண்டும். தீண்டாமை ஒழிப்பு தொண்டர் படைகள் கிராமந்தோறும் உருவாக்கப்படவேண்டும். அத்துடன் அத்தொண்டர் படைகளில் இருசாதியினராகப் பிரிக்கப்பட்டுள்ள தமிழ்ச் சமூகத்தின் இருசாராரும் அங்கம் வகிக்கவேண்டும். இது பொதுமக்களுக்கு நல்ல முன்மாதிரியாகவும் அமையும்.

---

சார்ஜன்ட்

## பரீட்சையில் சித்தி பெற்றனர்

மாவிட்டபுரம், செவ்வாய்

கடந்த ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற பொலிஸ் சார்ஜன்ட் பரீட்சைக்குத் தோற்றிய 402 பொலிஸ் கான்ஸ்டபிள்களில் 156 பேர் சித்தியடைந்திருக்கின்றனர். இவர்களில் 16 பேர்வடமாணத்தைச் சேர்ந்தவர்கள் என்றுகூறப்படுகிறது.

காங்கேசன் துறைப் பொலிஸ் நிலையத்திலிருந்து இப்பரீட்சைக்குத் தோற்றிய நான்கு பொலிஸ் கான்ஸ்டபிள்களும் சார்ஜன்ட் பரீட்சைகளில் சித்தி பெற்றுள்ளனர். கருணாரத்ன, சமரசிங்கா, குணவர்த்தன, வேற்றிவேலாயுதம் ஆகிய நால்வரும் காங்கேசன் துறைப் பொலிஸ் நிலையத்திலிருந்தும், பருத்தித்துறையில் இருந்து சுப்பிரமணியமும், சுன்னாகத்திலிருந்து பெரேராவும் இப்பரீட்சையில் சித்தியடைந்[illegible]

# மன அழுக்கை...

(4-ம் பக்க தொடர்ச்சி)

வன் அதற்கு மாறுகம் பொறுமை கொள்ளுதல் தவறேயாம், ஆனாலும் அது இயல்பே என மன்னித்தாலும் மன்னிக்கப்படலாம். தான் நன்கு அனுபவித்துச் சம்பிரமமாக வாழ்ந்துகொண்டு பிறர்வாழ மனம்பொறுத்தலின்மையிருக்கிறதே. அது ஒருபோதும் மன்னிக்கப்பட முடியாத பெருந்தவறாகும். இந்தமன நிலை மாசுபட்ட பெருந்திட்டு என்பதிற் சந்தேகமேயில்லை. இதனாலே;

"மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தறம் ஆகுல நீர பிற" என உறுதி கூறுகிறது வள்ளுவம்.

உடலின் புறஅழுக்கை நீராடுவதனால் போக்கிக்கொள்ளலாம், மன அழுக்கைப் போக்குவதெப்படி? சத்தியநெறி அதாவது, ஒருவன் தனக்காக — ஆன்ம திருப்திக்காக வாய்மையைக் கடைப்பிடித்து ஒழுகுவது ஒன்றே மனத்தூய்மையடையும் வழியாகும். சத்தியவந்தன்போல நடிப்பது உண்மையாகாது. உண்மை நெறிப்பட்ட வாழ்க்கையே ஒருவனை உத்தமனாக்கிவிடும்.

இதுவரையில் திட்டுஎன்ற சொல்லுக்கு அழுக்கு என்ற பொருளில் அமையும் தீங்குகளையும் அவற்றை நீக்கும் உபாயங்களையும் ஆராய்ந்தோம்.

இனி, தீட்டு என்பதற்கு ஆசௌசம் என்ற பொருள் பற்றிச் சிறிதுசிந்திப்போம்.

—— (தொடரும்)

# நாட்டிலும் நகரிலும்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டறப் பிணிப்பவை. தனக்கு அன்னமும் பாலும் தரும் பசுவை மனிதன் தெய்வமெனப் போற்றி வழிபட்டான். தெய்வங்களோடு அவைச்சம்பந்தப்படுத்தினான், சிவபிரான் இடபத்தை வாகனமாக்கினார். கண்ணபிரான் ஆநிரை மேய்த்தான்.

யந்திர யுகம் வந்ததும் பசுவுக்கும் எருதுக்கும் இருந்த மதிப்புக் குறைந்தது, கார்களும், லொறிகளும், ட்ராக்டர்களும், நீரிறைக்கும் பம்புகளும் வந்து கால்நடைகளுக்கு வேலையில்லாத்திண்டாட்டத்தைக்கொடுத்தன, பலனற்ற பசுக்களையும் எருதுகளையும் கசாப்புக்கடைக்கு அனுப்பினார்கள்.

மேற்கூறிய யந்திரங்களும் அவற்றின் உபகரணங்களும் அவற்றை இயக்கும் மண்ணெண்ணை முதலிய எரிபொருட்களும் பெரும்பாலும் வெளிநாடுகளிலிருந்தே தருவிக்கப்படுகின்றன. ஏராளமான அந்நிய செலாவணி இதற்காகச் செலவழிக்கப்படுகிறது. திடீரென்று ஓர் உலகயுத்தம் ஏற்படுமாகில் இவற்றின் இறக்குமதி தடைப்படும். வெளிநாடுகளிலிருந்து வரும் பாலுணவுகள் கிடைக்காமல் போய்விடும்.

இந்த நியாயத்தையும், பசுவைததார்மீக நெறிக்கும் மதக் கோட்பாடுகளுக்கும் முரணான தென்பதையும் எடுத்துக்காட்டி டில்லியில் உண்ணாவிரதம் மேற்கொண்ட பூரி சங்கராச்சாரிய சுவாமிகளை இந்திய அரசாங்கம் கைது செய்திருக்கிறது. பசுவதைக்கெதிராகச் சத்தியாக்கிரகம்முதலியநடவடிக்கைகளில்ஈடுபடுவது சரியல்ல என்று சிரிங்கேரி சாரதா பீடத்து சங்கராச்சாரிய சுவாமிகள் ஏற்கனவே தெரிவித்துள்ளார். இந்தியாவிலுள்ள நான்கு சங்கராச்சாரிய பீடாதிபதிகளும் இந்த விஷயத்தில் ஒன்று கூடி ஆலோசித்து மக்களுக்குச்சரியான மார்க்கத்தை எடுத்துக் கூறினால் நன்மை பயக்கும் என்று [illegible]

# பொலிஸார் தேடிய ஏழுவரில் ஐவர் கைது

திருநெல்வேலி, புதன்

யாழ்ப்பாணம் பொலிசாரால் சந்தேகத்தின் மீதுகடந்த ஒருமாதத்துக்குமேலாக தேடப்பட்டுவந்தஏழுபேரைக் கொண்ட ஒரு கோஷ்டியைச்சேர்ந்த ஐவர் நல்லிரவில் யாழ்ப்பாணம் பொலிசாரால் நாலுக்காகக் கைது செய்யப்பட்டார்கள்.

இவ்வருடம் ஐப்பசிமாதம் 11-ம்திகதிஇராசாவின்தோட்டத்தைச் சேர்ந்தவைரவன்கதிரவன் என்றநபரைப் பொல்லால் அடித்துப் படுகாயப்படுத்தினரென்ற சந்தேகத்தின்மேல் அதேயிடத்தைச்சேர்ந்த இ.செல்வம், இ.குணம், இ.தேவராசா, இ.தவம்என்றநான்கு சகோதரர்கள் உட்பட எம்.முத்தன், மி.சின்னத்துரை, எல் பண்டாரி ஆகிய ஏழுபேரையும் யாழ்ப்பாணம்பொலிசார் தேடிவந்தனர்.

நேற்றுமுன்தினமிரவு யாழ்ப்பாணம் குற்றப் பகுதியைச்சேர்ந்த பொலிஸ் சார்ஜண்ட் பி. நவரட்ணம் தலைமையில்சென்றபொலிஸ் கோஷ்டியொன்று சந்தேக நபர்களின் வீடுகளை முற்றுகையிட்டுமுத்தன், குணம், செல்வம், தேவராசா, சின்னத்துரை ஆகிய ஐவரையும் கைதுசெய்தனர். மேலும் சந்தேகநபர்களான பண்டாரியையும் தவத்தையும் பொலிசார் தேடிவருகின்றனர்.

கைதுசெய்யப்பட்ட ஐவரும் யாழ்ப்பாணம்பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளனர். புலன்விசாரணை தொடர்ந்து நடை பெறுகின்றது.

---

# பெந்தர-எல்பிட்டிய தேர்தல் ஆட்சேபம்

கொழும்பு, திங்கள்

சென்ற மாதம் 24 ம்திகதியன்று நடைபெற்ற உபதேர்தல் மூலம் பெந்தர— எல்பிட்டிய தொகுதிக்குத் தெரிவு செய்யப்பட்ட திரு. எச். ஜி. அல்வெலகாரியவாசத்தின்தெரிவை ஆட்சேபித்து சுப்ரீம் கோர்ட்டில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. திரு. டபிள்யூ. டொன் பெனெட் என்பவரே இத்தேர்தல் ஆட்சேப மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

---

தொடங்கஸ்லந்தை

# உபதேர்தல் ஜனவரி 15-ல்

கொழும்பு, திங்கள்

தொடங்கஸ்லந்தை தொகுதிஉபதேர்தலுக்கான நியமனப்பத்திரங்கள் இன்று குருநாகல் கச்சேரியில் தாக்கல் செய்யப்பட்டன. ஜனவரி 15 தேதி உபதேர்தல் நடைபெறும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் திருமதி எல். ராஜபக்சவும், ஐக்கியதேசியக் கட்சிசார்பில் திரு. எஸ். டபிள்யூ. ஆலகத்தவெலவும் சுயேட்சைவேட்பாளராக திரு. எஸ். சமரப்பாலாவும்அபேட்சகர்களாகப் போட்டியிடுகிறார்கள்.

---

# இலட்சார்ச்சனை

நவாலியூர், செவ்

நவாலியூர் சித்தாமணி விநாயகர் ஆலயத்தில் பஞ்சமுக விநாயகப்பெருமானுக்கு இலட்சார்ச்சனை, இம்மாதம் 28ந் தேதி திங்கட்கிழமை ஆரம்பமாகி அடுத்த மாதம் 17ந் தேதி சனிக்கிழமை முடிவுறும். தினமும் மாலை 5 மணிக்குப் பூஜை ஆரம்பமாகும்.

# சிரமதானம்

தாவடி, செவ்

தாவடியில் கிராமமுன்னேற்றச்சங்கத்தின் அனுசரணையுடன் பொது மக்களும், பனைப் பொலிசாரும் சேர்ந்து விளையாட்டு இடத்தைச் சிரமதானமுறையில் துப்புரவுசெய்து கரபந்தாட்டத்துக்குரிய கம்பங்களையும் நாட்டிவைத்தனர். வண. குருவ் சுவாமிகளும் இதில்பங்குபற்றியது குறிப்பிடத்தக்கது.

செம்பியன்பற்று கிராம முன்னேற்றச்சங்க அங்கத்தவர்கள், அவ்வூர்கிராம சேவகர் திரு. வி. சேதுநாயகம், பச்சிலைப்பள்ளி கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. எல். பிறெடிறிக், பனைப் பொலிசார் இவர்களின் உதவியுடன் மாமுனைச்சந்தியிலிருந்து ஆற்றங்கரை வரையுமுள்ள கண்டி வீதி அமைத்தும், செம்பியன்பற்றுமயானத்துக்குச் செல்லும்பாதையைச் சிரமைக்கும் வேலையையும் சிரமதான முறையில் செய்துவருகின்றனர். இம்முயற்சியில் பெண்களும்கலந்து கொண்டுள்ளனர்.

---

ஆசிரியருக்குக் கடிதங்கள்

## பாட்டு வரும

பாட்டு வரும் - அதைக்
கேட்டுக்கொண்டிருந்
தால்
ஆட்டம் வரும்; ஆட்டத்
திலே
பொன் மயில் கூட்டம்
வரும்

ஓர் ஆணும் பெண்ணும் (பெண்தான் சந்தேகப்படாதீர்கள்) சேர்ந்து பாடி இசைத் தட்டில் வெளிவந்திருக்கும் இப்படி ஒரு பாட்டை நூறு வீடுகளுக்குக் கேட்கும்படி ஒலிபெருக்கியில் வைத்து பகலும் இரவுமாக ஒருநாளைக்குப் பத்து வேளை ஒலிபெருக்கினால் மெய்யாகச் சொல்லுங்கள், எங்கள் இன்றைய சமூகத்தைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்? அது உழுத்துப்போய் விட்டதா, இல்லையா? இனி நம்மைக் கடவுள் தான் காப்பாற்றவேண்டும்.

ஸ்ரீ

யாழ்ப்பாணம்.

## கவனிப்பார்களா?

யாழ்ப்பாணம் சாப்பல் வீதி இரண்டாம் குறுக்குத் தெரு சந்தியில் இரண்டு வருடங்களாக ஒளி கொடுக்க மறந்த 'மெர்குரி' பல்புக்குப் பதிலாக புதிய 'பல்ப்' ஒன்று பொருத்தும்படி, முன்பு மாநகரசபைப் பிரதிநிதிகளிடம் பலமுறை எடுத்துக் கூறியும் பயன் கிடைக்காமல் போனது. ஆனால் இப்போது இந்தச் சந்தியில் 'மெர்குரி' லைட் பிரகாசித்து மக்களுக்கு நிம்மதியளிக்கிறது.

சாப்பல் வீதியில் மூன்றும் குறுக்குத்தெரு வீதி வாய்க்காலிலிருந்து சாக்கடை நீர் வீதியில் பாய்ந்து இரண்டாம் குறுக்குத்தெருவுக்குப் பாய்கிறது. மூன்றும் குறுக்குத் தெருவில் கட்டப்பட்டிருந்த கான், மூடப்பட்டுவிட்டதுதான் இதற்குக் காரணம். இதை மாநகரசபை இன்ஸ்பெக்டர்கள் கவனிக்காதது ஏனோ? மாநகரசபை ஆணையாளர்கள் இதுபற்றிக் கவனிப்பார்களா?

ஆர். ரீ. செல்லையா.

சாப்பல் வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோவியத் கலாசார குழுவினர் இங்கு வருவர்

குரும்பசிட்டி, செவ்.

இலங்கை-சோவியத் நட்புறவுச்சங்க வருடாந்த விழா வைபவத்தில் கலந்துகொள்வதற்காக சோவியத்யூனியனில் இருந்து கலாச்சாரத் தூதுக்குழுவினர் இலங்கைக்கு விஜயம் செய்ய இருக்கின்றனர். சோவியத் பாராளுமன்ற அங்கத்தவர்களும் அடங்கிய இந்த கலாச்சார தூதுக்குழு டிசம்பர் மாத முற்பகுதியில் இங்கு வரவிருக்கின்றது என சோவியத் ஸ்தானிகராலய கலாச்சாரப் பகுதி அதிகாரி திரு. சூவுக்கோ தவலைத்தெரிவித்துள்ளார். கொழும்பில் நடைபெறும் மகாநாட்டில் பங்குபற்றிய பின்னர் தூதுக்குழுவினர் நீர்கொழும்பு, குருநாகல், நாவலப்பிட்டி, யாழ்ப்பாணம் ஆகிய நகரங்களுக்கும் விஜயம் செய்வரெனத் தெரிகிறது. இதனையடுத்து இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் அழைப்பின்பேரில் சிறந்த ரஷ்ய உதைபந்தாட்டக்கோஷ்டியொன்றும் அடுத்தமாதமளவில் இலங்கைக்கு வருகைதரலாமெனஅறியப்படுகிறது.

## 'தமிழ் மகாவித்தியாலயம் அமைத்துத் தருக'

கொலன்னாவை, செவ்வாய்.

பண்டாரவளை வட்டாரத் தமிழ்பேசும் மாணவர்கள் உயர்தரக் கல்வி பெற இப்போது வசதி குறைவாக இருப்பதால் ஒரு சிரேஷ்ட தமிழ்மகாவித்தியாலயத்தை அமைத்துத் தரும்படி கல்வி அமைச்சரைக் கோரும் தீர்மானமொன்று பண்டாரவளை இந்து பரிபாலன சபைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.


மற்றவர்களை முந்திச் செல்ல


BSA

பி. எஸ். ஏ.

கோல்டின் டி லக்ஸ்

ரேட்ஸ்டர் சைக்கிள்களையே

தெரிவு செய்யுங்கள்



- உலகிலேயே மிகச் சிறந்த சைக்கிள்
- நீடித்த உறுதி வாய்ந்தது
- வசதிக்குச் சாதகமான அமைப்பு
- 'டெரி-டைப்' சீட்டுகள்

துரிதமான பாதுகாப்பான ஓட்டத்துக்கு ஒரு பி. எஸ். ஏ. யில் செல்லுங்கள்

ஏகவிநியோகஸ்தர்கள்:

கார்கில்ஸ் (இலங்கை) லிமிடெட்


## கூப்பன்

பெயர்: ..........

விலாசம்: ..........

இலக்கம்: ..........

[பி. எஸ். ஏ. சைக்கிளின் பிறேம் (frame)]

(கோட்டில் வெட்டி எடுக்கவும்)

## புரட்சிவாத ல. ச. ச. க. கோப்பாய் கிளை

கோப்பாய், செவ்.

புரட்சிவாத லங்கா சமசமாஜக்கட்சியின் வாலிபர்சங்கம் ஒன்று கோப்பாய் தெற்கில் திரு. வே. தம்பிராசா தலைமையில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது. அப்பொழுது தலைவராகத் திரு. வே. தம்பிராசாவும், காரியதரிசியாகத் திரு. ச. இறிவித்திராசாவும், தனாதிகாரியாகத் திரு. தா. செல்லையாவும் தெரிவுசெய்யப்பட்டனர்.

திருவாளர்கள் ப. சிவநேசராசா, ஞா. செல்லத்துரை, ரா. டேவிட், இ. கோபாலசிங்கம், வ. பலேசிங்கம், டா. வீரசிங்கம் ஆகியோர் நிர்வாகசபை அங்கத்தவராகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

## கதாகாலட்சேபத்தில் சிங்கள மக்கள்

கொலன்னாவை, செவ்வாய்.

இரத்தினபுரி சிவன் கோவிலில் தவயோகி ஸ்ரீ சச்சிதானந்த யோகீஸ்வரரின் பிரதம சிஷ்யரான திருமுருக மு. கி. நல்லதம்பி 'கந்தபுராணம்' சம்பந்தமாக இரவு 7 மணி முதல் 8 மணி வரை தினசரி கதாகாலட்சேபம் செய்துவருகிறார்.

தினசரி பெருந்தொகையான மக்கள் கலந்துகொள்ளும் இக்கதாகாலட்சேப நிகழ்ச்சியில் சிங்களமக்களும் கலந்துவருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## புதிய நீதியரசருக்கு வரவேற்பு

கொழும்பு, திங்கள்.

புதிய சுப்ரீம் கோர்ட் நீதியரசர் திரு. ஜி. டி. சமரநாயக்கவுக்கு இன்று சுப்ரீம் கோர்ட்டில் வரவேற்பு அளிக்கப்பட்டது. பிரபல வழக்கறிஞர்களும் சுப்ரீம் கோர்ட் நீதியரசர்களும் கோர்ட்டில் சமுகம் தந்திருந்தனர். நீதியரசர் கோர்ட்டுக்கு வந்ததும், பிரதம நீதியரசருடன் 'பெஞ்சி'ல் அமர்ந்தார்.

## நள்ளிரவில் தாக்கினார்களாம்

யாழ்ப்பாணம், செவ்.

நள்ளிரவில் வீட்டுக்கதவு தட்டி, அங்கிருந்த நபரை பொல்லால் தாக்கியதாக ஐவர் மீது பொலிசாரால் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்டவழக்கு யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் கோர்ட்டில் நேற்று விசாரணைக்கெடுத்துக்கொள்ளப்பட்டது.

தாக்குதலுக்குள்ளானவர் எனக் கூறப்படுபவர் யாழ்ப்பாணம் பலாலி வீதியைச் சேர்ந்த சங்கநாதபிள்ளை. எதிரிகள் சற்குணம் சிறிஸ்கந்தராசா, விவேகானந்தராசா, மகாலிங்கம், பாலசிங்கம் ஆகியோராவர்.

மாஜிஸ்திரேட் திரு. சி. கே. ராஜரத்தினம் நூறு ரூபா பிணையில் செல்ல எதிரிகளை அனுமதித்தார். 5-ம் திகதி மேல் விசாரணை ஒத்திவைக்கப்பட்டது. 1-ம், 5-ம் எதிரிகள் சார்பில் புரக்டர் அனுபசிங்கம்யோகநாதனும் 2-ம், 3-ம், 4-ம் எதிரிகள்சார்பில் அட்வகேட் சீனிவாசகன் புரக்டர் ஆர். விஸ்வநாதனின் அனுசரணையுடனும் ஆஜராஞர்கள்.

## "ஐக்கியம் அவசியம்"

கனகராயன்குளம், செவ்.

"வன்னி மன்னர்கள் இப்பகுதியை ஆண்டபோது சீருடனும் புகழுடனும் விளங்கிய இக்கிராமப்பகுதி அன்னியரின் படையெடுப்பால் தகர்க்கப்பட்டு, இன்று பின்தங்கிய நாடாகக் காணப்படுகிறது. இந்தப் பின்தங்கிய நாட்டின் கல்வி, கலாசாரம், பொருளாதாரம், அரசியலுணர்வு, இலக்கியம், சமயம் என்பன மறுமலர்ச்சிகொண்டு, உயர்வுபெற எமது மக்களின் ஒற்றுமை அவசியம்." என்று நட்டாங்கண்டல் கிராமமுன்னேற்றச் சங்கக் கூட்டத்தில் சங்கத் தலைவர் திரு. செ. பாலசுப்பிரமணியம் பேசுகையில் கூறினார்.

இச்சங்கத்தின் கீழுள்ள கிராமங்களை எப்படி முன்னேற்றலாமென்றும் கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது.

## பஸ்ஸை தாக்கினாராம்

பூநகரி, திங்கள்.

பூநகரி — கிளிநொச்சி பஸ் மீது கற்கள் வீசி தாக்கியது சம்பந்தமாக சந்தேகத்தின்மீது கதிரவேலு சிவசம்பு கிளிநொச்சிப் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

நேற்றிரவு வாடியடிச் சந்தியில் சந்தேகநபரும் வேறு சிலரும் பஸ்மீது கற்கள் வீசி பலத்த சேதம் உண்டுபண்ணியதாக பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது. பஸ் சாரதியும் 'கண்டக்டரும்' சந்தேக நபரை கிளிநொச்சிப் பொலிஸில் ஒப்படைத்துள்ளனர். இதில் சம்பந்தப்பட்ட வேறு சிலரைப் பொலிசார் தேடுகின்றனர்.

## முஸ்லிம்கள் சிங்களம் படிக்கவேண்டும்

—சேர் ரஸிக் பரீத்

கொலன்னாவை, செவ்வாய்.

"முஸ்லிம்கள் கட்டாயமாக சிங்களத்தைப் படிக்க வேண்டும். சிங்களம் படிப்பதால் இஸ்லாமியரின் வாழ்க்கை வளம் பெருகுகிறது. ஒருபோதும் முஸ்லிம்கள் தங்கள் உரிமைகளை விட்டுக் கொடுக்கக்கூடாது. இலங்கையில் ஒரு மூலையில் முஸ்லிம் மகனுக்குத் தீங்கிழைக்கப்பட்டாலும் முஸ்லிம்கள் அனைவரும் திரண்டெழுந்து அநீதியைத் தடுக்கவேண்டும்".

இவ்வாறு சேர் ரஸிக் பரீத், இரத்தினபுரி ஹிதாபத்துல்ல இஸ்லாமிய வாலிபர்சங்க வாசிகசாலை திறப்பு விழாவில் பேசும்போது குறிப்பிட்டார்.

## மாஜிஸ்திரேட் ராஜினாமா

காலி, திங்.

கேகாலையில் மாஜிஸ்திரேட்டாக கடமையாற்றிய திரு. எம். எல். ஏ. ஹசான் பதவியிலிருந்தும் ராஜினாமா செய்து தற்பொழுது காலியில் வழக்கறிஞராகத்தொழில்புரிந்துவருகின்றார்.

# 'ஈழநாடு' சைக்கிள் ஓட்டப்போட்டி

## விபரங்கள்

ஜனவரி 1, 1967 — பி. ப. 4 00 மணி

### முதலாவது ஓட்டப்பந்தயம்

### மாணவர் போட்டி

ஐந்துமைல் — யாழ். கோட்டையைச் சுற்றி

| | |
|---|---|
| முதலாவது பரிசு: | பி. எஸ். ஏ. சைக்கிள் |
| இரண்டாவது பரிசு: | கிரிக்கெட் மட்டை |

ஜனவரி 1, 1967 — பி. ப. 4 30 மணி

### இரண்டாவது ஓட்டப்பந்தயம்

### வயது வந்தோர் போட்டி

பத்துமைல் — யாழ். கோட்டையைச் சுற்றி

| | |
|---|---|
| முதலாவது பரிசு: | பி. எஸ். ஏ. சைக்கிள் |
| இரண்டாவது பரிசு: | தூய வெண்கலத்தட்டு (ட்ரே) |

## விதிகளும் நிபந்தனைகளும்

### முதலாவது ஓட்டப்பந்தயம்

1. பங்குபற்றுவோர் யாவரும் ஜனவரி 1, 1967-ல் 18 வயதோ அல்லது அதற்குக் குறைந்தவர்களாகவோ இருக்க வேண்டும்.
2. பந்தயத்தில் பங்குபற்றப் போதிய உடலுறுதியுள்ளவர்களாக இருக்க வேண்டும்.
3. 'ஈழநாட்'டில் வெளியாகும் கூப்பன் பத்திரங்களிலேயே எல்லா விண்ணப்பங்களும் அனுப்பப்பட வேண்டும்.
4. பங்குபற்றுவோர் பி. எஸ் ஏ. சைக்கிள்களிலேயே ஓட வேண்டும்.
5. விண்ணப்ப முடிவு திகதி: டிசெம்பர் 15, 1966.
6. முடிவு திகதிக்குப் பின் அனுப்பப்படும் விண்ணப்பமெதுவும் ஏற்றுக் கொள்ளப்படாது
7. ஓட்டப்பந்தய முடிவுக்குப்பின் எவ்விதக் கடிதத் தொடர்பையும் 'ஈழநாடு' ஏற்காது.
8. மத்தியஸ்தர்களின் தீர்ப்பே முடிவானதாகும்.
9. ஒவ்வொரு விண்ணப்பத்துடனும் 5 கூப்பன்கள் இணைக்கப்பட வேண்டும்.

### இரண்டாவது ஓட்டப்பந்தயம்

இதில் கலந்துகொள்வோர் யாவரும் ஜனவரி 1, 1967-ல் 18 வயதுக்கு மேற்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

முதலாவது ஓட்டப்பந்தயத்துக்கான விதிகளும், நிபந்தனைகளும் இரண்டாவது ஓட்டப்பந்தயத்துக்கும் உரியனவாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மேற்கிந்திய - இந்திய முதலாவது டெஸ்ட்

## பம்பாயில் நடைபெறும்

## பட்டோடி நவாப் தலைமை வகிப்பார்

புதுடில்லி, நவ. 22

மேற்கிந்திய கிரிக்கெட் கோஷ்டிக்கும் இந்திய கிரிக்கெட் கோஷ்டிக்குமிடையேயான முதலாவது கிரிக்கெட் டெஸ்ட் டிசம்பர் மாதம் பதின்மூன்றும் திகதி நடைபெறும்.

இக்கிரிக்கெட் டெஸ்ட் பம்பாயில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய கிரிக்கெட் கோஷ்டிக்கு பட்டோடி நவாப் தலைமை (காப்டன்) வகிப்பார். நட்கர்ணி போர்டே, சர்தேசாய், சந்திரசேகர் ஆகியோரும் முதலாவது கிரிக்கெட் டெஸ்டில் விளையாடுவார்கள் ஹனுமந்சிங், என்ஜினியர், சுப்பிரமணியம் ஆகியோர் ரிசேர்வி லுள்ளனர்.

உதைபந்தாட்டம்

## உரும்பராய் கழகத்திடம் இ. போ. ச. தோல்வி

உரும்பராய், செவ்.

உரும்பராய் விளையாட்டுக் கழகத்திற்கும் யாழ்ப்பாணம். இ. போ. ச. விளையாட்டுக் கழகத்திற்கும் இடையே நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் உரும்பராய் விளையாட்டுக்கழகம் 5-1 கோல்களால் வெற்றி பெற்றது.

போட்டி ஆரம்பமாகி முடியும்வரை விறுவிறுப்பாகவே காணப்பட்டது. முதலில் உரும்பராய் உதவிக் காப்டன் மூர்த்தி வலது முன்னணி வீரரின் உதவியுடன் ஒரு கோலைப் போட்டார். பின்னர் இ. போ. ச. வலது முன்னணி வீரர்தனது முழுத்திறனையும் பயன்படுத்தி ஓர் கோலைப் போட்டார் இதனைத்தொடர்ந்து இ. போ. ச. கோல்காப்பு வீரரின் கவனயீனத்தால் உரும்பராய்க்குஓர் 'பனல்டி' கிடைத்தது. இதையும் அவர்கள் பயன்படுத்தித் தங்கள் எண்ணிக்கையை இரண்டாக்கிக் கொண்டனர்.

இடைவேளைக்குப் பின்னர் மூர்த்தி மீண்டும் ஒரு கோலைப்போட்டார். இ. போ. ச. விளையாட்டு வீரர்கள் திறமையாக விளையாடியும் கோல் அடிக்கும் சந்தர்ப்பத்தை தவறவிட்டார்கள். உரும்பராய் கோஷ்டி மத்திய முன்னணி வீரர் ஞானசோதி மீண்டும் இரண்டு கோல்களை விளாசினார். இப்போட்டியில் ஞானராசா, சோதிலிங்கம், மகாலிங்கம் ஆகியோரின் விளையாட்டு சிறப்பாகவிருந்தது.

இப்போட்டிக்குதிரு. இரத்தினம் மத்தியஸ்தராக கடமையாற்றினார்.

## ரஷ்ய பாடகி மரணம்

மாஸ்கோ, நவ. 22

ரஷ்யாவின் பிரபல பாடகிகளில் ஒருவரான ஜெலினு கற்றுங்ஸ்கயா, தமது 78வது வயதில் இங்கு காலமாகியதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (பி. டி. ஐ.)

## விவேகானந்த மன்றம்

கொஸ்லாந்தை, செவ்.

அப்புத்தளை இதல்கஸ்கின்ன கீழ் டிவிஷன் தோட்டத்தில் விவேகானந்தா மன்றம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது.

மன்ற அங்குரார்ப்பண விழா தோட்ட ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமிகோவிலில் திரு. ஸி. வி. நடராசா தலைமையில் நடைபெற்றது.

கீழ் வருவோர் நடப்பு வருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்: தலைவர். திரு. ஆர். வடிவேலு, இணைச் செயலாளர்; திருவாளர்கள்: கே. எஸ். கதிர்வேல், ஏ. கிருஷ்ணசாமி, பொருளாளர்: திரு. எம். பி. ஆறுமுகம், உதவிப் பொருளாளர்: திரு. கே. ஆறுமுகம். 11 பேர் கொண்ட கமிட்டியொன்றும் நிறுவப்பட்டது.

## விவசாயிகளுக்கு நிவாரண உதவி

பளை, செவ்வாய்

வரும் 23-ந் திகதி புதன் கிழமை மாலை 2 மணியளவில் பளை மகாவித்தியாலயத்தில் பச்சிலைப் பள்ளி காரியாதிகாரியின் தலைமையில் அண்மையில் ஏற்பட்ட மழையினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு மானியம் வழங்குவதற்கு உணவு விவசாயப் பெரும் பகுதி உத்தியோகத்தர், கிராமசேவையாளர்கள், பயிர்ச் செய்கைக்குழு நிர்வாகஸ்தர்கள் முன்னிலையில் பயிரழிவு விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்படும்.

கூடைப்பந்தாட்டம்

## முத்துக்குமாரு இல்லம் வெற்றியீட்டியது

அளவெட்டி, செவ்

விமலகாமம் ஆங்கிலபாடசாலை மாணவிகளுக்கிடையில் நடைபெற்ற கூடைப்பந்தாட்டப் போட்டியில் முத்துக்குமாரு இல்லமும் சுப்பிரமணியம் இல்லமும் கலந்துகொண்டன.

இடைவேளைக்கு முன்னர் முத்துக்குமாரு இல்லத்தினர் மிகவும் திறமையாக விளையாடி சுப்பிரமணியம் இல்லத்தினரை திணறவைத்தனர். முதலில் முத்துக்குமாரு இல்லத்தைச் சேர்ந்த இராசேஸ்வரி அடுத்தடுத்து ஒன்பதுகோல்களை போட்டார். சுப்பிரமணியம் இல்லத்தைச் சேர்ந்த பத்மலோசனி மூன்றுகோல்கள் போட்டார்,

இடைவேளைக்குப்பின் இரு இல்லமும்விட்டுக்கொடுக்காமல்விளையாடி நான்குகோல்களைப் பெற்றுக்கொண்டன. முடிவில் முத்துக்குமாருஇல்லம் 13-7கோல்களால்வெற்றியீட்டியது. மத்தியஸ்தராக திருமதி வைத்திலிங்கம் கடமையாற்றினார்.

## 'மைக்கேல் வெற்றி'

உரும்பராய், செவ்

உரும்பராய் மைக்கேல் கோஷ்டிக்கும் குருநகர் ஆரோக்கிய நாதர் கோஷ்டிக்குமிடையே உரும்பராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற 'ஏ' பிரிவு உதைபந்தாட்டப்போட்டியில் 4-1 கோல்களால் உரும்பராய் மைக்கேல் கோஷ்டி வெற்றிபெற்றது இப்போட்டிக்கு திரு. பரமேஸ்வரன் மத்தியஸ்தராகக்கடமையாற்றினார்.

உதைபந்தாட்டம்

## விளையாட்டுக்கழக சுற்றுப்போட்டி

குரும்பசிட்டி, செவ்.

குரும்பசிட்டி உதயதாரகை விளையாட்டுக்கழகம் நடாத்தும் 9-வது வருடாந்த உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி டிசம்பர் மாத முற்பகுதியில் ஆரம்பமாகும். முதற்பிரிவு, இரண்டாம் பிரிவு என இரு பிரிவுகளுக்கிடையில் நடக்கவிருக்கும் இச் சுற்றுப்போட்டியில் பங்குபற்ற விண்ணப்பங்களை இம்மாதம் 30-ந் திகதி வரை அனுப்பலாம் ; எனச் செயலாளர் அறிவித்துள்ளார், யாழ்ப்பாண மாவட்டத்தில்உள்ள சிறந்த விளையாட்டுக்கழகங்கள் கலந்துகொள்ளும் இப்போட்டியில் சாம்பியன் கோஷ்டிக்கு வெற்றிக்கிண்ணம் பரிசாகவழங்கப்படும். கட்டுவன் மைதானத்தில் சுற்றுப் போட்டி நடைபெறும் எனத் தெரிகிறது

## பசு மாடு கடத்தினராம்

உடுப்பிட்டி, செவ்வாய்

கரணவாய் தெற்கு வலவன் தோட்டம் என்னுமிடத்தில் சுப்பிரமணியம் என்பவருடைய பசு மாடு ஒன்றைக் கடத்திச் சென்றபொழுது வல்லை வெளியில் வல்வெட்டித்துறைப் பொலிசாரினால் சந்தேகத்தின் மீது கைது செய்யப்பட்டு வெள்ளையன் என்பவர் ரூபா 200 பிணையில் விடப்பட்டுள்ளார். பிரஸ்தாப மாடும் உரியவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## இன்று நடைபெறும் போட்டி

திருநெல்வேலி, புதன்

நான்கு மாதங்களுக்கு முன்னர் நடாத்தப்பட்டு முடிவுதெரிவிக்கப்படாத யாழ்ப்பாணக் கல்விஇலாகா உதைபந்தாட்டக்கோஷ்டிக்கும், யாழ்ப்பாணம் மாநகரசபை உதைபந்தாட்டக் கோஷ்டிக்குமிடையிலான உதைபந்தாட்டப்போட்டி இன்று மாலை மீண்டும் நடைபெறும்.

இன்றைய போட்டியில் வெற்றியீட்டும் கோஷ்டி இம்மாதம் 29-ம் திகதி சாம்பியன் ஸ்தானத்துக்காக யாழ்ப்பாணம் தபால் ஊழியர் கோஷ்டியுடன் மோதும்.

## காவலர்பேர்வையில் கள்வர்

மல்லாவி, செவ்

இரவுநேரத்தின்போது கிளிநொச்சிச்சந்தையில் தங்கியிருந்தஒருவியாபாரியிடம் ஒருவர் வந்துதாம்ஒரு இரகசியப் பொலிசார்எனத்தெரிவித்து அவரிடம் பலவிபரங்களைகேட்டபின் அவரிடமிருந்தவற்றைச் சுருட்டிக்கொண்டு செல்லமுயன்றபோது சந்தையில் அப்போதிருந்த மற்ற வர்த்தகர்கள் சந்தேகநபரைப் பிடித்து அடித்து விரட்டியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.




லக்ஷபான பாட்டரிகள்

இறக்குமதியாகும் எந்த பாட்டரியையும் விட குறைந்த செலவில் கூடிய சேவை தருகின்றன

ஏனெனில்:

★ அவை, பூரண சக்தியுடனே தொழிற்சாலையிலிருந்து புதுமை குலையாமல் உங்களை வந்தடைகின்றன. இறக்குமதிபாட்டரிகள் போல சேமிப்பில் இருப்பதால் அவை சக்தி இழப்பதில்லை

★ லக்ஷபானபாட்டரிகள், சர்வதேச மின் நுணுக்க கமிஷன்விதிக்கும் தரங்களுக்கு நிகரான, அதி உன்னத சிறப்பு வாய்ந்தவை என்று பரீட்சித்து நிரூபிக்கப்பட்டவை.

★ லக்ஷபான பாட்டரிகள் இறக்குமதியாகும் எந்த ரகங்களையும் விட மிக மலிவானவை.

எவ். பண்ட் லே
கார்ப்பரேஷன்
லிமிட்டெட்

# நடேஸ்வரா சாம்பியனானது

## விறுவிறுப்பான போட்டியின் பின் ஏற்பட்ட முடிவு

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் பாடசாலை விளையாட்டுச் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்ற கல்லூரிகளுக்கிடையேயான முதலாம்பிரிவு 'பி' டிவிஷன் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டுயின் சாம்பியன் போட்டியில் பிரிவுச்சாம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்ட காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரிக்கும், யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்துக்குமிடையே நேற்று மேலும் ஒரு மோதல் விறுவிறுப்பாக நடைபெற்றது.

இப்போட்டியில் ஆரம்பத்திலிருந்து முடிவு வரையும் கடுமையாக மோதியநடேஸ்வரா, பிரிவுச் சாம்பியனாகியது. முன்னர் ஒருமுறை ஒழுங்கு செய்யப்பட்ட இச் சாம்பியன் போட்டியில், கனகரத்தினம் கோஷ்டி 4 கோல்களும் நடேஸ்வரா 2 கோல்களும் பெற்றிருந்த நேரத்தில் வெளிச்சமின்மை காரணமாக ஒத்திவைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

முன்னர் நடைபெற்ற போட்டியிலும் பார்க்க இம்முறை நடேஸ்வராவின் ஆட்டம் சிறப்பாக இருந்தது. இடைவேளைக்கு முன்னர் நடைபெற்ற போட்டியில் நடேஸ்வராவே முதலாவது கோலைப் போட்டது. இக்கோலை இக்கோஷ்டியின் வலது முன்னணி வீரர் போட்டிருந்தார், இவ்வீரரின் ஆட்டம் ரசிக்கக்கூடியதாக இருந்தது. இதையடுத்து கனகரத்தினம் கோஷ்டியின் மத்திய முன்னணி வீரர் இம்மனுவல் ஒரு கோலை துரிதமாக விளாசினார். இடைவேளையின் போது இருகோஷ்டியும் தலா ஒவ்வொருகோல் பெற்றிருந்தன.

இடைவேளையின் பின்னர் போட்டியின் தரம் உச்சக்கட்டத்தில் இருந்தது. இரு சாராரும் கடுமையாக மோதி பெரும் பலப்பரீட்சையில் ஈடுபட்டனர். கனகரத்தினம் கோஷ்டிக்கு பல கோல்கள் போடும் சந்தர்ப்பங்கள் கிடைத்தும் அவற்றைத் தவறவிட்டனர். நடேஸ்வரா இடது முன்னணி வீரர் மேலும் ஒரு கோலை வெலுத்து வாங்கினார். கடைசி நேரத்தில் கனகரத்தினம் கோஷ்டிக்கு ஒரு 'பனல்டி' கிடைத்தது. அப் பனல்டி'யை 8 முறை வைத்து அடிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தும் அதை வீரர் மரியகுமார் பயன்படுத்தத் தவறிவிட்டார். இப்போட்டிமுடிவில் நடேஸ்வரா 2—1 கோல்களால் கனகரத்தினம் கோஷ்டியைத் தோற்கடித்து சாம்பியனானது. யாழ் விளையாட்டரங்கில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு. [illegible] லிங்கம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

## புன்னாலைகட்டுவன் சீர்பெறும்

குரும்பசிட்டி, செவ்.

புன்னாலைக்கட்டுவன் கிராமத்தின் அபிவிருத்தி குறித்து தற்போது கோப்பாய் எம். பி. திரு. சி கதிரவேற்பிள்ளை தீவிர கவனம் செலுத்தி வருகின்றார், புன்னாலைக்கட்டுவனுக்கு காலதாமதமின்றி விரைவில் மின்சார வசதி அளிக்கும்படியும், இப்பகுதியில் கனால் இலாகாவின் கந்தோர் ஒன்றினை திறந்து வைக்கும்படியும், இங்குள்ள உப-தபால் நிலையத்திலிருந்து தபால் விநியோகம் செய்வதற்கு நடவடிக்கைகள் மேற் கொள்ளும்படியும் சம்பந்தப்பட்ட அமைச்சுக்களுக்கு எம். பி. கடிதம் அனுப்பிவைத்துள்ளதாக அறியப்படுகிறது.

## நிரந்தர விடுதி

குரும்பசிட்டி, செவ்.

பலாலி விமான நிலையத்தில் சுங்கப்பகுதி அதிகாரிகள் நிரந்தரமாக தங்குவதற்கான விடுதிக் கட்டடம் நிறுவப்பட இருப்பதாகத் தெரிகிறது. இப்த விடுதியை அமைப்பதற்கான நிலத்தினைத் தெரிவு செய்வதில் அண்மையில் சில அரசாங்க அதிகாரிகள் ஈடுபட்டிருந்தனர். தற்போது விமானப் பிரயாணிகளைப் பரிசோதனை செய்ய [illegible] விமான நிலையத்திற்கு வருவது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணவன் நிலைகண்டு நீதிபதி இரங்கினர்

## ஆனலும் மனைவியின் கோரிக்கையால் சிறைத் தண்டனை விதித்தார்

மாவிட்டபுரம், செவ். கணவன் காசநோயால் பீடிக்கப்பட்டிருந்த போதிலும் அவர் தமக்கு ஜீவனாம்சம் கட்டத் தவறிவிட்டாரே என்ற காரணத்துக்காக அவரை மறியலுக்கு அனுப்பும்படி ஒரு மனைவி நீதிபதியிடம் கேட்ட சம்பவம் மல்லாகம் நீதிமன்றத்தில் நடந்துள்ளது.

இவ்வழக்கில் உடுவிலைச் சேர்ந்த முருகேசு இராசம்மா என்பவர் தனது கணவரான முருகேசு தனக்குத் தர வேண்டிய ஜீவனாம்சப் பணம் 400 ரூபாவை இன்னும் தரவில்லை என்று குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

நீதிபதி திரு. டி. எஸ். நிற்சிங்கா, முருகேசுவிடம் 'ஏன் பணம் கட்டவில்லை' என்று விசாரித்தபோது தமக்கு தற்போது பணவசதி இல்லை என்றும் தான் காசநோயால் பீடிக்கப்பட்டிருப்பதாகவும் அரசாங்க உதவியாகப்பத்து ரூபாய் பெறுவதாகவும் பணம் கட்ட அவகாசம் தரும்படியும் கூறி, காசநோயால் பீடிக்கப்பட்டு இருப்பதனை உறுதிப்படுத்தும் வைத்திய அத்தாட்சிப் பத்திரத்தையும் சமர்ப்பித்தார்.

முருகேசுவுக்கு பணம் கட்ட அவகாசம் கொடுக்க மறுத்தஇராசம்மா, நீதிபதியிடம் எதிரி தனது கணவனாக இருந்தாலும் தனக்கு மாதந்தோறும் ஜீவனாம்சம் கட்டத் தவறிவிட்டார் என்றும் இதனால் இத்தொகை 400 ரூபாய் ஆகிவிட்டது என்றும் 400 ரூபாயும் கட்டாவிட்டால் அவரை மறியலுக்கு அனுப்பும்படியும், தான் அவர்மீது இரக்கம் காட்டுவதற்கு இல்லை என்றும் ஏனெனில் அவர் ஒர் உழைப்பாளி என்றும் கூறினார்.

இதனைத் தொடர்ந்து எதிரி முருகேசுவை நோக்கிய நீதிபதி "உமது நிலையைப் பார்க்கப் பரிதாபமாக இருக்கிறது. நீர் உண்மையில் காசநோயால் பீடிக்கப்பட்டு இருக்கிறீர் என்பதனை நான் நம்புகிறேன். ஆனால் சட்டப்படி நான் உம்மை மறியலுக்கு அனுப்ப வேண்டியிருக்கிறது. ஒரே சலுகை மட்டும் என்னால் காட்ட முடியும். அதுதான் கடூழியச் சிறைவாசத்துக்குப் பதில் சாதாரணச் சிறை" என்று கூறி ஆறு மாதச் சிறைத் தண்டனை விதித்தார்.

---

### துணிகரத் திருட்டு
#### தங்க நகைகள், புடவைகள் அபேஸ்

உடுப்பிட்டி, செவ்வாய். கோவில் குருக்களின் வீட்டில் ஒருவகைக் கழற்றித் துணிகரத் திருட்டு நடைபெற்றுள்ளது. இச்சம்பவம் நேற்றிரவு கரணவாய் தெற்கு, தூர்க்கைப்புலம் கட்டிப் பிள்ளையார் கோவிலிலுள்ள, கோவில் குருக்களான ஸ்ரீ ம. சுப்பிரமணியக்குருக்களின் வீட்டில் நிகழ்ந்தது. நகை, உடுப்புக்கள் அடங்கிய 'டிரங்கு'ப் பெட்டிகள் களவாடப்பட்டதாகவும், இத் திருட்டில் ஒரு திருட்டுக் கோஷ்டி திட்டமிட்டுச் செயலாற்றியிருக்கவேண்டுமென்றும் கூறப்படுகிறது. திருடப்பட்ட பெட்டிகள் திறந்த நிலையில் கோவிலின் தென்பக்கக் கதவருகிலும் கோவில் உள் வீதியிலும், வெளியிலும் அலங்கோலமாகக் கிடக்கக் காணப்பட்டன. அப்பெட்டிகளில் இருந்த சுமார் ரூபா 5000 பெறுமதியான தங்க நகைகளும், பிடவைகளும் திருட்டுப் போயுள்ளதாகவும் அறியப்படுகிறது. இத் திருட்டு சம்பந்தமாகப் பருத்தித்துறைப் பொலிசார் புலன்விசாரணை செய்துவருகின்றனர்.

---

### இடமாற்றங்கள்

முல்லைத்தீவு, செவ்வாய். முல்லைத்தீவு பிரிவுக்காரியாதிகாரி கந்தோரில் பிரதமலிகிதராகக் கடமையாற்றும் திரு. எஸ். பத்மநாதன் ஜனவரிமாதம் முதல் திகதியுடன் இரத்தினபுரிக்கச்சேரிக்கு இடமாற்றம்பெற்றுள்ளார்.

ஃ ஃ ஃ

முல்லைத்தீவு தபால் நிலையத்தில் உதவி அதிபர்களாகக் கடமையாற்றும் திருவாளர்கள் அ. குணரத்தினம், ஏ. செல்வராசா ஆகிய இருவரும் யாழ்ப்பாணத்தபால் நிலையத்துக்கும் திரு. எஸ். சிதம்பரப்பிள்ளை கொழும்பு பெரியதபால் நிலையத்துக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

---

### தாக்குதல்வழக்கு ஒத்திவைப்பு

திருநெல்வேலி, புதன். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தஜெயரத்தினம் என்பவரை அடித்துப் படுகாயப்படுத்தியதாக சுப்பிரமணியம் குலசிங்கம்என்பவர் மீது யாழ்ப்பாணம் பொலிஸாரால் குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு நேற்றைய தினம் யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் திரு ரி. ஜே. ராஜரட்ணம் முன்னிலையில்விசாரணக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

யாழ்ப்பாணம்சட்டவைத்திய அதிகாரி டாக்டர் சுப்பிரமணியம் சாட்சியமளித்த பின்னர் மாஜிஸ்டிரேட் மேல் விசாரணையை பெப்ரவரி மாதம் 25ம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளார்.

---

### சாம்பியன்போட்டி

யாழ்ப்பாணம், புதன். யாழ்ப்பாணம் விளையாட்டுச்சங்கத்தின் ஆதரவில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் "நொக்கவுட்" உதைபந்தாட்டச்சுற்றுப்போட்டியின் சாம்பியன் போட்டி வெள்ளிக்கிழமை யாழ். மத்தியகல்லூரி மைதானத்தில் நடைபெறும். இப்போட்டியில் நாவாந்துறை சென். மேரிஸ் உதைபந்தாட்டக் கோஷ்டியும் யாழ்ப்பாணம் ஒலிம்பிக் உதைபந்தாட்டக் கோஷ்டியும் மோதிக்கொள்ளும்.

---

### சுதந்திர தின விழா ஏற்பாடுகள்

கொழும்பு, செவ். இலங்கையின் சுதந்திர தினத்தை இம்முறை கொழும்பில் கோலாகலமாகக் கொண்டாடுவதற்கு ஒழுங்குகள்செய்யப்பட்டு வருகின்றன. வெளிநாடுகளிலிருந்து பிரமுகர்கள்பலர் இவ்விழாவில்கலந்துகொள்ள அழைக்கப்படுவார்கள் என்றும் தெரிகிறது.

---

### பொலிஸ் இடமாற்றம்

யாழ்ப்பாணம், புதன். கிளிநொச்சி பொலிஸ் நிலையபொறுப்பதிகாரிஉதவி இன்ஸ்பெக்டர் திரு. என். பொன்னம்பலம் காங்கேசன்துறைக்கு இன்றுமுதல் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். கோப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உதவி இன்ஸ்பெக்டர் திரு. ராஜேஸ்வரன் கிளிநொச்சிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

---

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் ஸ்ரீ கோவில் வேலிவிதி, 68-ல் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு நவம்பர் மாதம் 23-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

---

# கனவில் கூறியது உண்மையாகி விட்டது

## இளம் பெண் மரண விசாரணையில் சாட்சியம்

கொழும்பு, செவ். கண்டி தாதிகள் பயிற்சி நிலையத்தில் பயிற்சிபெற்று வந்த செல்வி குசுமா பெரேரா என்னும் இளம் பெண், தாம் தங்கியிருந்த விடுதியில் இறந்துகிடக்கக் காணப்பட்டார்.

அவரது மரணவிசாரணையின்போது, அந்தவிடுதியின் பாதுகாவலரான திருமதி மல்லிகா சுபசிங்கா சாட்சியமளிக்கையில் அன்று அதிகாலை 4 மணியளவில் தாம்ஒரு கனவுகண்டதாகவும்கனவில் வெண்ணிற ஆடை அணிந்த ஒருபெண் தம்மிடம் வந்து விடுதியறையில் ஒரு பெண் இறந்துகிடப்பதாகக் கூறிச் சென்றதாகவும் உடன்தாம் விழித்தெழுந்து சென்றுபார்த்தபோது குசுமா இறந்து கிடக்கக் காணப்பட்டதாகவும்கூறினர்.

பிரேத பரிசோதனை நடத்திய டாக்டர் எம்.எம். வேலும்மயிலும் சாட்சியமளிக்கையில் மூளையில் இரத்தநாளமொன்று வெடித்ததால் மரணம்சம்பவித்திருக்கிறதென்றும் [illegible] சந்தேகத்துக்கு இடமில்லையென்றும் தெரிவித்தார்.

இறக்கைமரணம் என மரணவிசாரணையின்பின் தீர்ப்பளிக்கப்பட்டது.

---

### நெல் விளைச்சலை பெருக்க வழி

வவுனியா, செவ். "இலங்கையில் உற்பத்தி செய்யும் வேளாண்மையின் சரியான செலவுக்கணக்குகள் தகுந்தமுறையில்கவனிக்கப்படவில்லை. சரியான கணக்குகள் இருந்தால்தான் இலங்கையில் எப்படி நெற்பயிர்ச் செய்கையை விருத்தி செய்யலாமெனவும் மேலும் எந்த விதமான முறையைக் கையாண்டு கூடுதலான விளைச்சலைப் பெறலாமெனவும் கணக்கிடலாம்"

இவ்வாறுநேற்றுவவுனியா விவசாய அலுவலகத்தில் விவசாய அதிபர் திரு. எஸ். நடேசன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் இலங்கை மத்திய வங்கி நெல் உற்பத்தி மதிப்பீட்டு இலாகா [illegible] இதிகாரி [illegible] செய்கையில் குறிப்பிட்டார்.

---

# 'பெண் பாடசாலைகளுக்குமுன் நின்ருல் கசை அடி கிடைக்கும்'

## நீதிபதி எச்சரிக்கை

மாவிட்டபுரம், செவ். கொள்ளை அடிக்க முயன்ற வழக்கு ஒன்றில் எதிரிகளை நன்னடத்தைப் பிணையில் செல்ல அனுமதித்த நீதிபதி அடுத்த மூன்று வருடகாலத்துக்குள் அவர்கள் பெண்கள் கல்வி பயிலும் பாடசாலைகளுக்கு முன்னல் காணப்பட்டால் எதிரிகள் இருவருக்கும் கசை அடி தான் கிடைக்குமென்று எச்சரித்தார்.

இவ்வழக்கில் சண்டிலிப்பாயைச் சேர்ந்த நாகமுத்து இராசன் (17 வயது), கணபதி இராசன் (19 வயது) ஆகிய இருவரும் சென்ற மே மாதம் 11-ம் தேதி அதே இடத்தைச் சேர்ந்த சரஸ்வதிதேவி விநாயகமூர்த்தியின் 2100 ரூபாய் பெறுமதியான தாலிக் கொடியையும் சங்கிலியையும் கொள்ளை அடிக்க முயன்றதாக சங்கானைப் பொலிசாரால் குற்றம் சாட்டப்பட்டு இருந்தது. வழக்கறிஞர் திரு. ஆர். ஜே. செல்வரத்தினம் சங்கானைப் பொலிஸ் சப் இன்ஸ்பெக்டர் மெண்டிஸின் உதவியுடன் வழக்கை நடத்தினர். 1-ம் எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு. டி. தம்பிரத்தினமும் 2-ம் எதிரி தரப்பில் திரு. வி எஸ். நாதனும் ஆஜரானர்கள்.

வழக்கு விசாரணையில் எதிரிகளைக் குற்றவாளிகளாகக் கண்ட நீதிபதி எதிரிகள் மீது கருணை காட்டும்படி செய்யப்பட்ட மனுவின் பேரில் எதிரிகளைப்பற்றி அறிக்கை சமர்ப்பிக்கும்படி நன்னடத்தை பகுதி அதிகாரிக்கு உத்தரவிட்டு வழக்கை தண்டனை விதிப்பதற்காக நேற்றுவரை ஒத்திவைத்திருந்தார். வழக்கு நேற்று மறுபடியும் விசாரணைக்கு எடுக்கப்பட்டதும் நீதிபதி எதிரிகளை நோக்கி 'நீங்கள் இருவரும் சண்டிலிப்பாயிலுள்ள காடையர் கூட்டத்துக்குத் தலைவர்கள் போலிருக்கிறது பாடசாலை மாணவிகளும், இளம் யுவதிகளும் தெருவில் செல்லும் போது 'சீக்காய்' அடித்துப் பாட்டுப்பாடியும் அவர்களுக்குத் தொந்தரவு கொடுப்பதுதான் உங்கள் தொழில்என்று நன்நடத்தை அதிகாரி சமர்ப்பித்துள்ள அறிக்கை தெட்டத் தெளிவாகக் கூறுகிறது. இப்படிப்பட்ட உங்களுக்கு நீதிமன்றத்தில் பகிரங்கமாக மேசையில் நீர்வாணமாகப் படுக்க வைத்து கசை அடி தருவது தன் சரியான தண்டனை. நீங்கள் வயது குறைந்த இளைஞர்களாக இருப்பதால் உங்களுக்கு மீண்டும் ஒரு சந்தர்ப்பம் தருகிறேன். ஆனல் ஒன்று! நினைவிருக்கட்டும். உங்கள் இருவரையும் பாடசாலை நேரங்களில் தெருவில் காணக்கூடாது அப்படிக் காணப்பட்டால் பொலிசாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்துக்கு அழைத்து வரப்பட்டு கசை அடிதான் தண்டனையாகக் கிடைக்கும்" என்ருர்.

அவர்களை தலா 500 ரூபா பிணையில் மூன்று வருடகாலத்துக்கு நன்னடத்தைப் பாதுகாப்பு அதிகாரியின் கண்காணிப்பில் இருக்கும்படியும் முடிக்குரிய செலவாக தலா 50 ரூபா கட்டும்படியும் நீதிபதி உத்தரவிட்டார்.

---

### ஆலைத்தொழிலாளி மரணவிசாரணை

வவுனியா, திங்கள். சட்டவிரோதக் குடியேற்றக் காரர் என்றசந்தேகத்தின் மீது கைது செய்யப்பட்டு பொலிஸ் பாதுகாப்பிலிருக்கையில் காலமான வவுனியா ஆலைத் தொழிலாளி தவராசாவின் மரணம் சம்பந்தமாக விசாரணை செய்துவரும் வவுனியா மாஜிஸ்டிரேட் தவராசா கைது செய்யப்பட்ட இடத்தை நேற்றுச் சென்று பார்வையிட்டார்.

மேலும் சில சாட்சிகளின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டபின் விசாரணை இம்மாதம் 25-ந் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

---

### விருப்பமில்லாதவர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மென்றும் கட்சியிலிருந்தால் இனக்கொள்கையை ஏற்று நடக்கவேண்டுமென்றும் திருமதி சிறிமாவோ தெளிவாகத் தெரிவித்து விட்டதாகவும் அறியப்படுகிறது.

இடதுசாரிகளின் சேர்க்கையை உதறித்தள்ளி விட வேண்டுமென்ற கருத்தை சுதந்திரக்கட்சி பிரமுகர்கள் சிலர் அதை இப்போது கைவிட்டுவிட்டனராம்.

---

### ராமானுஜ ஐயங்கார் கதாகாலட்சேபம்

கொழும்பு, செவ். கொழும்பு ஜிந்துப்பிட்டி ஸ்ரீசிவசுப்பிரமணிய கோவில் சொல்லின் செல்வன் ஸ்ரீ ராமானுஜஐயங்கார் கடந்த 19-ந்திகதி தொடக்கம்கதாகாலட்சேபங்கள் நடத்திவருகிருர். இக்கதாகாலட்சேபங்கள் அடுத்த மாதம் 10-ம் திகதிவரைநடைபெறும்.

---


# C. W. E. ஜவுளிகள்

கூ. மொ. வி. ஸ்தாபனத்தாரின் பிடவைகளை மொத்தமாக விநியோகம் செய்வதற்கு பிரதான மொத்த விற்பனையாளராக நியமிக்கப்பட்டிருக்கிருேம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்ருேம்.

இன்று முதல்

2×4 வர்த்தக அன்பர்கள் எம்முடன் தொடர்புகொள்ளும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்ருேம்.

## த. குமாரசாமி

(C. W. E. அங்கீகாரம் பெற்ற பிரதான மொத்த - சில்லறை விற்பனையாளர்)

44, பெரியகடை, — யாழ்ப்பாணம்.

போன்: 7034


1039

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org